விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



# வலம்புரி
Valampurii
E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 172 வள்ளுவர் ஆண்டு 2057 வைகாசி 26 செவ்வாய்க்கிழமை (09.06.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## அரசிடம் இருந்த ரூ. 808 மி.டொலர் மாயம் ஐ.எம்.எப் அறிக்கை கூறுகிறதாம்

### சீறுகிறார் சம்பிக்க ரணவக்க



(கண்டி)

கடந்த 2025 ஆம் ஆண்டில் அரசாங்கத்திடம் இருந்த பணத்தில் 808 மில்லியன் டொலர் மாயமாகியுள்ளதாகவும் அது தொடர்பாக சரியான தரவுகள் இல்லை எனவும் ஐ.எம்.எப் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதாக முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற ஒருங்கி 15ஆம் பக்கம் பார்க்க

கடற்றொழிலாளர் சங்கத்தின் தீவிர முயற்சி

## செம்பியன்பற்று மீனவர் பத்திரமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். வடமராட்சி கிழக்கு, செம்பியன்பற்று வடக்கு பகுதியில் கடலுக்குச் சென்று காணாமல்போன மீனவர் ஒருவர், சக மீனவர்கள் மற்றும் கடற்படையினரின் தீவிர தேடுதல் வேட்டையின் மூலம் சுமார் 10 கிலோ மீற்றர் தொலைவிலிருந்து உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

செம்பியன்பற்று வடக்குப் பகுதியைச் சேர்ந்த மீனவர் ஒருவர் நேற்று முன்தினம் (ஜூன் 7) 15ஆம் பக்கம் பார்க்க

### பொதுப்பரீட்சை

## தரம் 5 – ஆகஸ்ட் 9
## உயர்தரம் – ஆகஸ்ட் 10

(கொழும்பு)

2026ஆம் ஆண்டுக்குரிய கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை ஆகஸ்ட் மாதம் 10ஆம் திகதி ஆரம்பமாகும் என இலங்கை 02ஆம் பக்கம் பார்க்க


## செம்மணியால் செங்குருதி உறைகிறது தோண்டத் தோண்ட என்புக்கூடுகள்

### நேற்றும் 16 என்புத்தொகுதிகள் அடையாளம்

(யாழ்ப்பாணம்)

செம்மணி சித்துப்பாத்தி மனிதப்புதைகுழியின் நேற்றைய அகழ்வில் மாத்திரம் சிறுவர்களுடைய என்புக்கூடுகள் உட்பட 6 மனித என்புக்கூட்டுத் தொகுதிகள் குவியலாக அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் இதனோடு புதிதாக 16 மனித என்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

(02 ஆம் பக்கம் பார்க்க)



## நாளையும் மறுதினமும் ஆடியபாதம் வீதியில் போக்குவரத்துத் தடை

(திருநெல்வேலி)

நாளை புதன்கிழமை (10.06.2026) மற்றும் நாளை மறுதினம் வியாழக்கிழமை (11.06.2026) ஆகிய நாட்களில் திருநெல்வேலிச் சந்தி 02ஆம் பக்கம் பார்க்க

## ஈஸ்டர் தாக்குதல் விசாரணைகளுக்கு கம்மன்பில, விமல், திலித் இடையூறு

### நீதிபதியிடம் குற்றப்புலனாய்வு அறிக்கை

(கொழும்பு)

உதய கம்மன்பில, விமல் வீரவன்ச, திலித் ஜயவீர உள்ளிட்ட அரசியலுடன் தொடர்புடைய சிலர் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகளுக்கு பாதிப்பு ஏற்படும் வகையிலும் இடையூறு விளைவிக்கும் வகையிலும் திட்டமிட்ட செயற்பாட்டில் மறைமுகமாக ஈடுபட்டு வருவதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம், கோட்டை நீதிவான் நீதிமன்றத்திற்கு நேற்று (08) அறிவித்துள்ளது.

தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் உள்ள அரச 16ஆம் பக்கம் பார்க்க

பொலிஸாரின் நெருக்கடிக்கு மத்தியில்

## பாடகர் சங்கீத்தனை விடுவிக்கக் கோரி வல்வை மண்ணில் போராட்டம்



15ஆம் பக்கம் பார்க்க

## சுகாதாரத் தொண்டர்கள் நேற்றும் போராட்டம்




15ஆம் பக்கம் பார்க்க

## சங்கீத்தனை சந்தித்தார்

### சிறீதரன் எம்.பி

(யாழ்ப்பாணம்)

தாயகப் பாடல் பதிவேற்றம் தொடர்பான குற்றச்சாட்டில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறிய 15ஆம் பக்கம் பார்க்க

21 கோடி ரூபா பெறுமதியான

## போலி டொலர் நோட்டுக்களை தன்வசம் வைத்திருந்த பெண் கைது

(கொழும்பு)

வெளிநாடு ஒன்றில் அச்சிடப்பட்ட 7 இலட்சம் போலி டொலர் நோட்டுகளுடன் இலங்கைப் பெண் ஒருவரை மத்திய குற்றப்புலனாய்வு பணியகம் நேற்றுக் கைது செய்துள்ளது.

இப் பணத்தொகையின் இலங்கை ரூபா பெறுமதி 21 கோடி ரூபா எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தப்பண நோட்டுகள் வெளிநாட்டில் அச்சிடப்பட்டு நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாகப் பொலிஸார் சந்தேகிப்பதுடன் 02ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளையும்...

ஆடியபாதம் வீதிப் பகுதிக்கு காப்பெற் இடும் பணிகள் நடைபெறவுள்ளதனால் குறித்த வீதிப்பகுதியானது போக்குவரத்திற்கு அனுமதிக்கப்படமாட்டாது என நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் மயூரன் அறிவித்துள்ளார். (ந-7,33)

## பொதுப் பரீட்சை...

பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையொன்றில், இப்பரீட்சை செப்ரெம்பர் மாதம் 05ஆம் திகதி வரை நடைபெறும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை 2026ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை ஆகஸ்ட் மாதம் 9ஆம் திகதி நடைபெறுமெனவும் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது. (ம-7)

## போலி டொலர்...

இந்தக் கடத்தல் சம்பவத்துடன் பாகிஸ்தான் நாட்டவர் ஒருவருக்கும் தொடர்பிருப்பதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இப் போலிப் பண நோட்டுகளை ஒரு டொலர் 284 ரூபா என்ற வீதத்தில் மாற்றுவதற்குத் தயாராக இருந்துள்ளதுடன் உள்நாட்டு வர்த்தகர்களை ஏமாற்றி இந்த டொலர் நோட்டுக்களை அவர்கள் பரிமாற்றம் செய்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட கொட்டிகாவத்தை பெண்ணை இன்று புதுக்கடை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ந-7)

## செம்மணியால்...

நேற்றைய அகழ்வுப்பணிகள் குறித்து ஊடகங்களுக்குக் கருத்துரைத்த சட்டத்தரணி வி.எஸ்.நிறஞ்சன் கருத்துரைத்ததாவது,

செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்டத்தில் 19 ஆம் நாள் அகழ்வுப் பணிகள் நேற்றையதினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நீதிபதி எஸ்.லெனின்குமார் முன்னிலையில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போதே சிறுவர்களுடைய என்புக்கூட்டுத் தொகுதிகள் உள்ளடங்கலாக 06 மனித என்புக்கூட்டுத் தொகுதிகள் குவியலாக அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றினைச் சுத்தம் செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இதேவேளை நேற்றைய தினம் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளின்போது 06 மனித என்புக் கூட்டுத் தொகுதி உட்பட 16 மனித என்புக் கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அத்துடன் ஏற்கெனவே அடையாளம் காணப்பட்ட என்புக் கூட்டுத் தொகுதிகளில் 4 என்புக் கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அதன் அடிப்படையில் செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரையிலான காலப்பகுதியில் நடைபெற்ற அகழ்வுப் பணிகளின்போது 318 மனித என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் 302 என்புக் கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, றுகுணு பல்கலைக்கழக மாணவர்களின் பங்களிப்பு மற்றும் உதவியுடன் இந்த மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் மேலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக இடம்பெற்றுவரும் இந்த அகழ்வுப் பணியின்போது, தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவா தலைமையிலான குழுவினர், சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன், குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள், சட்டத்தரணிகள் மற்றும் துறை சார்ந்த நிபுணர்கள் எனப் பலரும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அகழ்வுப் பணிகள் 20ஆவது நாளாக இன்றும் முன்னெடுக்கப்படவுள்ளது. (ந-7,60)

# தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பேருந்து விபத்து; 10 பேர் காயம்

(கொழும்பு)

தெற்கு அதிவேக நெடுஞ் சாலையின் பின்னதுவ நுழை வாயிலுக்கு அருகில் நேற்று (08) மாலை இடம்பெற்ற பேருந்து விபத்தில் சுமார் 10 பேர் காயமடைந்துள்ளனர்.



கொழும்பில் இருந்து காலி நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த சொகுசுப் பேருந்து ஒன்றே இவ்வாறு விபத்துக் குள்ளாகியுள்ளது. கட்டுப்பாட்டை இழந்த பேருந்து, பின்னதுவ நுழைவாயிலின் பாதுகாப்புப் பக்க வாயிலை உடைத்துக் கொண்டு பாய்ந்து, அங்கிருந்த தூண் ஒன்றில் பலமாக மோதியது.

விபத்து நடந்த உடனே விரைந்து செயற்பட்ட அதி வேக நெடுஞ்சாலை ஊழியர்களும் பொலிஸாரும் காயமடைந்தவர்களை மீட்டு சிகிச்சைக்காக காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். (ந-7)

இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் ஓம் சக்தி அருள்வாக்குப் பெற்ற இரத்தினசாமி சாஸ்திரியார் அவர்கள் யாழ்.வருகை, ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடங்க, திருமணத் தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை, வெளிநாடு செல்லத்தடை, கல்வியில் தடை, குழந்தைப் பாக்கியம் மற்றும் எந்தப் பிரச்சினைக்கும் நேரில். (C-5801)

074 196 4945, 076 682 7368

இல.90, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தமிழர் தாயகத்தின் முதன்மை நாளிதழ்

அதிக வாசகர்கள் அதிக விற்பனை

உங்கள் வலம்புரி

26 ஆண்டுகளைக் கடந்து உங்களுடன்...

உங்கள் விளம்பரங்களை உங்கள் வீட்டில் இருந்தே பிரசுரிக்க விசேட ஏற்பாடு


076 097 3127, 076 636 3378

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# புலிகளின் நோக்கத்தை நிறைவேற்ற ஒருபோதும் இடமளிக்கமாட்டோம்

## இனவாதத்தை தூண்டும் விமல் வீரவன்ச

(கொழும்பு) ................ புலிகளின் நோக்கத்தை நிறைவேற்ற நாங்கள் இடமளிக்க போவதில்லை என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.



பயங்கராவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள உளவுத் துறையின் முன்னாள் தலைவர் சுரேஷ் சலேவை பாதுகாப்பதற்காக நேற்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கோட்டை புகையிரத நிலையத்தின் முன்பாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

சுரேஷ் சலேவை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்து, முள்ளிவாய்க்கால் பழிவாங்கலை நிறைவேற்றவே அரசாங்கம் முயற்சிக்கிறது. புலிகளின் நோக்கத்தை நிறைவேற்ற நாங்கள் இடமளிக்க போவதில்லை.

சுரேஸ் சலேவுக்காக தொடர் சத்தியாகிரக போராட்டத்தில் ஈடுபடுவோம் எனத் தெரிவித்தார்.

இந்தப் போராட்டத்தில் விமல் வீரவன்ச,உதய கம்மன்பில உட்பட அரசியல் தரப்பினர்கள் கலந்து கொண்டனர். (நி)

# ஈஸ்டர் தாக்குதல் விசாரணைக்கு நாங்கள் எதிரானவர்கள் அல்ல

## பொறுப்புக் கூறல் முக்கியமாம் நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு) உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளுக்கு நாங்கள் எதிரானவர்கள் அல்ல. பொறுப்புக்கூறல் என்பது முக்கியமானது. அரசியல் பழிவாங்கல்களை நோக்கமாகக் கொண்ட விசாரணைகள் உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒருபோதும் உண்மையான நீதியை வழங்காது. என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள சுரேஸ் சலேவின் நிலைமை தனக்கு கவலையளிப்பதாக குறிப்பிட்டு தனது உத்தியோகபூர்வ எக்ஸ் வலைத்தளத்தில் மேற்கண்டவாறு பதிவேற்றம் செய்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதானி சுரேஷ் சலே பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு நடத்தப்படும் விதம் குறித்து ஊடகங்களில் வெளியாகும் செய்திகள் மற்றும் அவரது சட்டத்தரணிகளால் நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்களும் மிகுந்த அதிர்ச்சியளிக்கின்றன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி கிடைக்க வேண்டும் என்பதில் நாம் அனைவரும் உறுதியாக உள்ளோம்.ஆனால் அது எவ்வித பாரபட்சமும், அரசியல் செல்வாக்கும் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட அணுகுமுறையும் இன்றி வழங்கப்பட வேண்டும்.



எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் குண்டுத்தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளுக்கு நாங்கள் எதிரானவர்கள் அல்ல. பொறுப்புக்கூறல் என்பது முக்கியமானது, ஆனால் அரசியல் பழிவாங்கல்களை நோக்கமாகக் கொண்ட விசாரணைகள் உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒருபோதும் உண்மையான நீதியை வழங்காது. இதுவே எனது நேர்மையான கருத்தாகும் என அவர் தெரிவித்தார். (நி)

# எத்தியோப்பியாவில் கடத்தப்பட்ட யாழ்.இளைஞர்கள் மீட்பு

## வெளிவிவகார அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு) எத்தியோப்பியாவில் ஒழுங்கமைக்கப்பட்ட சர்வதேச குற்ற கும்பல் ஒன்றினால் கடத்தப்பட்டு, பிணைக் கைதிகளாக சிறை வைக்கப்பட்டிருந்த இலங்கை பிரஜைகள் மூன்று பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இலங்கை மற்றும் எத்தியோப்பிய அதிகாரிகளால் கூட்டாக முன்னெடுக்கப்பட்ட விசேட நடவடிக்கை ஒன்றின் மூலமே இவர்கள் மூவரும் விடுவிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ள இவர்களை மீண்டும் இலங்கைக்கு அழைத்து வருவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தற்சமயம் தூதரக மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூன்று இளைஞர்களே இவ்வாறு கடத்தலுக்கு உள்ளாகியிருந்தனர். இவர்கள் சட்டவிரோதமான முறையில் கனடாவுக்குச் செல்வதற்காக எத்தியோப்பியா ஊடாகப் பயணிக்க முற்பட்ட போதே இக்கடத்தல் கும்பலிடம் சிக்கியுள்ளனர்.

எத்தியோப்பியாவிலுள்ள சர்வதேச கடத்தல் கும்பல் ஒன்று தங்களைத் தடுத்து வைத்துள்ளதாகவும், தங்களை விடுவிப்பதற்குப் பெருந் தொகை பணத்தைப் பிணைப் பணமாக வழங்குமாறு கோரி வற்புறுத்துவதாகவும் பாதிக்கப்பட்ட இளைஞர்கள் இலங்கையிலுள்ள தங்களது உறவினர்களுக்குத் தொலைபேசி ஊடாகத் தகவல் வழங்கியிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து உறவினர்களால் இலங்கைப் பொலிஸாருக்கும் வெளிவிவகார அமைச்சுக்கும் அவசர முறைப்பாடு அளிக்கப்பட்டது.

இதேவேளை, இந்தச் சட்டவிரோத மனிதக் கடத்தல் மற்றும் வெளிநாட்டுப் பயண ஒழுங்கமைப்புகளைச் சட்டவிரோதமான முறையில் மேற்கொண்ட பிரதான சந்தேகநபர் அண்மையில் இலங்கைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# போதைப்பொருள் கடத்தல்காரர்களின் பிரதான இலக்கு சிறுவர்களே

## அமைச்சர் சந்தனஅபேரத்ன எச்சரிக்கை

(கொழும்பு) நாட்டில் 11 வயது முதல் 17 வயதுக்கு இடைப்பட்ட சிறுவர்களே போதைப்பொருள் கடத்தல்காரர்களின் பிரதான இலக்காக மாறியுள்ளதாகப் பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

புத்தளம் மாவட்டத்தின் பள்ளம பகுதியில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இந்த தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,தற்காலச் சமூகத்தில் குடும்பக் கட்டமைப்பு ஒரு முக்கிய சமூக அலகாகப் பலவீனமடைந்து வருவதே இத்தகைய விபரீதங்களுக்கு முக்கிய காரணம்.

மேலும் பொதுமக்கள் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள் மற்றும் நாட்டின் சகல குடிமக்கள் என அனைத்துத் தரப்பினருக்கும் இதில் கூட்டுப் பொறுப்பு உள்ளது.

அத்துடன், நாட்டில் போதைப்பொருள் வர்த்தகத்தை முற்றிலுமாக ஒழிப்பதே அரசாங்கத்தின் இறுதி இலக்கு.

நாட்டில் 11 வயது முதல் 17 வயதுக்கு இடைப்பட்ட சிறுவர்களே போதைப்பொருள் கடத்தல்காரர்களின் பிரதான இலக்காக மாறியுள்ளது எனத் தெரிவித்தார்.

# வெளிநாட்டு பணவலுப்பல்கள் அதிகரிப்பு - மத்திய வங்கி தகவல்

(கொழும்பு) 2026 ஆம் ஆண்டின் மே மாதத்தில் வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கையர்களிடமிருந்து இலங்கைக்கு கிடைத்த மொத்த வெளிநாட்டு வருவாய் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.இதன்படி, வெளிநாடுகளில் வேலை செய்பவர்களிடம் இருந்து இலங்கைக்கு 847 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கி வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையின்படி, 2025 மே மாதத்தில் கிடைத்த 641.7 மில்லியன் அமெரிக்க டொலர்களுடன் ஒப்பிடுகையில், இந்த முறை பண அனுப்புதல் வருமானம் 205.3 மில்லியன் டொலர்களால் அதிகரித்துள்ளது.

மேலும், 2026 ஜனவரி முதல் மே மாதம் வரையிலான காலப்பகுதியில் வெளிநாட்டு தொழிலாளர்களால் இலங்கைக்கு அனுப்பப்பட்ட மொத்த பணத் தொகை 3.90 பில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்ந்துள்ளதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.கடந்த ஆண்டின் இதேகாலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இது 26 சதவீத வளர்ச்சியாக பதிவாகியுள்ளது.

இலங்கையின் அந்நியச் செலாவணி வருவாயை வலுப்படுத்துவதில் வெளிநாட்டு தொழிலாளர்களின் பண அனுப்புதல்கள் தொடர்ந்தும் முக்கிய பங்களிப்பை வழங்கி வருகின்றன என்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## விளையாட்டுச் செய்திகள்

# கல்லூரிகளின் சமர்

# ஹாட்லிக் கல்லூரி சம்பியன்

**ரட்ணசபாபதி கிண்ணத்திற்கான கால்பந்தாட்ட போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி வெற்றிச் சாதனை படைத்து சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.**




கல்லூரிகளின் சமர் என வர்ணிக்கப்படும் நெல்லியடி மத்திய கல்லூரி மற்றும் ஹாட்லிக் கல்லூரி அணிகளுக்கு இடையிலான ரட்ணசபாபதி கிண்ணத்திற்கான கால்பந்தாட்ட போட்டி நேற்று முன்தினம் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

முதல் பாதியாட்டத்தில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் விளையாடிக் கொண்டிருந்தனர்.

இருப்பினும் முதல் பாதியாட்டம் நிறைவடைவதற்கு 30 செக்கன்கள் இருக்கும் போது ஹாட்லிக் கல்லூரி இரு வீரர்கள் பேற்றுப் பிரதேசத்தில் வைத்து அடித்த போதும் நெல்லியடி மத்திய கல்லூரி கோல்காப்பாளரினால் தடுக்கப்பட்ட போது மீண்டும் அந்த பந்தை ஹாட்லிக் கல்லூரி வீரர் பிரவீன் கோலாக்க முதல் பாதியாட்டத்தில் ஹாட்லிக் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தனர்.

இரண்டாவது பாதியாட்டத்தில் இரு அணிகளும் சம பலத்துடன் மோதினர்.

இதனால் ஆட்டம் விறுவிறுப்பின் உச்சக் கட்டத்தை எட்டியது. இருப்பினும் மேலதிக கோல்களை பதிவு செய்ய முடியவில்லை.

இதனால் ஆட்ட நேர முடிவில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாவது தடவையாக சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

நான்காவது ஆண்டாக நடைபெறும் இப்போட்டியில் கடந்த மூன்று போட்டிகளும் சமநிலை தவிர்ப்பு உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதில் ஆட்ட நாயகனாக பிரவீன், சிறந்த கோல் காப்பாளராக நிகாஷ் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (3-90)

# தேசிய மட்ட சம்பியனாகியது மகாஜனக் கல்லூரி






இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்டச் சம்மேளனம் 18 வயது பெண்கள் அணிகளுக்கிடையில் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் மகாஜனக் கல்லூரி தேசிய மட்டத்தில் சம்பியனாகியுள்ளது.

குருணாகல் மலியதேவ பெண்கள் மகளிர் கல்லூரியை இறுதிப்போட்டியில் எதிர்கொண்ட மகாஜன 2.0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று தேசிய மட்ட சம்பியனாகியுள்ளது.

இத்தொடரின் சிறந்த வீராங்கனையாக மகாஜன மங்கை ஆன் திவிஸ்சனாவும் சிறந்த கோல்காப்பாளராக மகாஜன மங்கை சாளினியும் தெரிவுசெய்யப்பட்டனர்.(3)

# நியூசிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட்; இங்கிலாந்து அபார வெற்றி

நியூஸிலாந்திற்கு எதிரான முதல் டெஸ்டில் இங்கிலாந்து அணி அபார வெற்றி பெற்றது.

இங்கிலாந்து மற்றும் நியூஸிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி லார்ட்ஸில் நடந்தது.

முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து 140 ஓட்டங்களும், நியூஸிலாந்து 113 ஓட்டங்களும் எடுத்து ஆல்அவுட் ஆகின.

பின்னர் இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய இங்கிலாந்து அணி 226 ஓட்டங்களுக்கு ஆல்அவுட் ஆனது. அதிகபட்சமாக எமிலியோ கே 57 ஓட்டங்களும், ஜேமி ஸ்மித் 39 ஓட்டங்களும், பென் டக்கெட் 33 ஓட்டங்களும் எடுத்தனர்.

இதன் மூலம் நியூஸிலாந்து அணிக்கு 254 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. அதன்படி களமிறங்கிய நியூஸிலாந்து அணியில் டெவோன் கான்வே நின்று ஆட, ஏனைய வீரர்கள் ஒற்றை இலக்கத்தில் ஆட்டமிழந்தனர்.

அணியின் ஸ்கோர் 111 ஆக இருந்தபோது, கான்வே 41 ஓட்டங்களில் ஸ்டோக்ஸ் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். மொத்தம் 9 விக் கெட்டுகள் சரிந்த நிலையில், க்ளென் பிலிப்ஸ் அதிரடியாக ஆடி வெற்றிக்காக போராடினார்.

எனினும், மேட் ஹென்றியின் இறுதி விக்கெட்டை அட்கின்ஸன் வீழ்த்த, நியூஸிலாந்து அணி 138 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதன் மூலம் இங்கிலாந்து அணி 115 ஓட்ட ங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

பிலிப்ஸ் 44 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார். இங்கிலாந்து தரப்பில் கஸ் அட்கின்ஸன் 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார். (3)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணைகளில் அரசியல்வாதிகள் தலையிடக்கூடாது

## அருட்தந்தை சிறில் காமினி வலியுறுத்து

(கொழும்பு)

**உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளை எந்தக் காரணத்திற்காகவும் தாமதப்படுத்தவோ அல்லது திசை திருப்பவோ அனுமதிக்க முடியாது என்று அருட்தந்தை சிறில் காமினி வலியுறுத்தியுள்ளார்.**



கொழும்பிலுள்ள பேராயர் அலுவலகத்தின் ஊடகப் பேச்சாளர் நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பொன்றில் கருத்து வெளியிட்ட போது, அருட்தந்தை சிறில் காமினி மேற்குறித்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

இந்த விசாரணைகளை நிறுத்துவது அல்லது தடை செய்வது தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழைக்கப்படும் பெரும் அநீதியாகும்.

எந்தெந்தத் தடைகளை எதிர்கொண்டாலும் இந்த விசாரணைகளைத் தொடருமாறு அரசாங்கத்தையும் விசாரணைக் குழுக்களையும் நாங்கள் வலியுறுத்துகின்றோம்.

குறிப்பாக இந்தச் செயற்பாட்டில் அரசியல்வாதிகள் தலையிடக்கூடாது.

குற்றப் புலனாய்வுத் துறை உட்பட சட்டபூர்வமான விசாரணைக் குழுக்கள் தங்களது கடமைகளைச் சுதந்திரமாகவும் தடையின்றியும் ஆற்றுவதற்குத் தேவையான வசதிகளை வழங்குவது அனைவரின் பொறுப்பாகும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ந)

# நடப்பாண்டில் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படாது

## வர்த்தக அமைச்சர் உறுதிபடத் தெரிவித்தார்



(கொழும்பு)

நடப்பாண்டில் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படாது என, வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஏற்கனவே அதிக விலையில் விற்பனை செய்யப்பட்ட சில அரிசி வகைகளின் விலையும் தற்போது குறைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அநுராதரபுரத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட போதே, அவர் இதனைக் கூறியுள்ளார். இதனிடையே, சிறு போகம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாதத்தைக் கடந்துள்ளது.

எனினும் கடந்த பெரும் போகத்தில் அறுவடை செய்யப்பட்ட நெல்லை இதுவரை விற்பனை செய்ய முடியாதமையால் விவசாயிகள் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக தெரிவித்துள்ளனர். (ந)

# சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு புதுக்குடியிருப்பில் யோகாப் போட்டி

(நெளுக்குளம்)

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகமும் இலங்கை யோகாப் பயிற்சி கல்லூரியும் இணைந்து நடத்தும் மாபெரும் யோகாப் போட்டி எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

போட்டியில் கலந்து கொள்ள விரும்புவோர் தமது முழுப்பெயர், வயது மற்றும் முகவரி ஆகிய விபரங்களுடன் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

மேலதிக தகவல்களுக்கு 077 5185 713 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். (8-299)

# சிறுவர் சித்திரக்கண்காட்சி

(சாவகச்சேரி)

தென்மராட்சி வரணி சிட்டிவேரம் கண்ணகையம்பாள் அறநெறிப் பாடசாலையின் ஏற்பாட்டில் கடந்த 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை "மகிழ்வின் நிறங்கள்" சிறுவர் சித்திரக் கண்காட்சி நிகழ்வானது பாடசாலையில் ஆரம்பமானது.

இந் நிகழ்வானது எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை பிற்பகல் 3 மணி தொடக்கம் 5 மணி வரையும், சனி மற்றும் ஞாயிறு ஆகிய இரு தினங்களும் காலை 8 மணி தொடக்கம் 5 மணி வரையும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (8-30)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1992-இந்து
நட்சத்திரம்: பரணி
7இல்செவ்
உயரம்:5'5"
தகைமை/தொழில்: Photographer (Swiss)
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: B/16935

பிறப்பு:1994-இந்து
நட்சத்திரம்:உத்தரம்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:BSC(QS),France
எதிர்பார்ப்பு: only France
தொ.இ: B/16937

பிறப்பு:1985-RC
உயரம்:5'5"
தகைமை/தொழில் -கட்டிட உதவியாளர்
எதிர்பார்ப்பு: தகுதியானபெண்
தொ.இ: B/16939

பிறப்பு: 1987-இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
உயரம்:5'4"
தகைமை/தொழில்-PVT Work, France
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16941

பிறப்பு: 1994-இந்து
நட்சத்திரம்:பூரட்டாதி
8இல்செவ்
கி-பா- 38
உயரம்:5'11"
தகைமை/தொழில்: QS(PVT)
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/16942

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு:1998-இந்து
நட்சத்திரம்: கேட்டை
6இல் சூரிசெவ்
கி-பா-9 1/2
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Bpharm, Demo
எதிர்பார்ப்பு: உயர்பதவிகள்
தொ.இ: G/14560

பிறப்பு -1996 - இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி-பா-5 3/4
உயரம்: 5'1"
தகைமை/தொழில் - BSc, Teacher
எதிர்பார்ப்பு - உயர்பதவிகள்
தொ.இ,: G/16936

பிறப்பு-1997-இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 13
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: College Teacher
எதிர்பார்ப்பு: Engineer, Doctor
தொ.இ: G/16938

பிறப்பு-1996-NRC
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BPharm,MBA, MSC, Internship(அயர்லாந்து)
எதிர்பார்ப்பு - உயர்பதவிகள்
தொ.இ: G/16940

பிறப்பு:1991-இந்து
நட்சத்திரம்:அச்சுவினி
7இல்செவ்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: Degree, DO
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: G/16943

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# யாழில் இன்றுமுதல் டெங்கு ஒழிப்பு விசேட வேலைத்திட்டம்

## யாழ்.அரச அதிபர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ். மாவட்டத்தில் டெங்கு நுளம்பு ஒழிப்பிற்கான விசேட வேலைத்திட்டம் ஒன்றை இன்று முதல் எதிர் வரும் 12 ஆம் திகதி வரை முன்னெடுக்கவுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.**

யாழ்.மாவட்டத்தில் டெங்கு கட்டுப்பாட்டு நிலையில் அதிக ஆபத்துள்ள கரவெட்டி, பருத்தித்துறை, யாழ்ப்பாணம், கோப்பாய், சங்கானை, சாவகச்சேரி, நல்லூர், சண்டிலிப்பாய், தெல்லிப்பழை, உடுவில் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இன்று தொடக்கம் எதிர்வரும் 12ஆம் திகதிவரை விசேட டெங்கு கட்டுப்பாட்டு வார நடவடிக்கைகள் செயற்படுத்தப் படவுள்ளன.

இதன்படி இன்றைய தினம் பொதுமக்களின் வீடுகள் மற்றும் சுற்றுச்சூழலிலும், நாளைய தினம் மாவட்டத்தின் சகல அரச மற்றும் தனியார் அலுவலகங்களிலும், நாளை மறுதினம் பாடசாலை மற்றும் சகல கல்வி நிறுவனங்களிலும், 12ஆம் திகதி வர்த்தக நிலையங்கள், சந்தைகள், மதஸ் தலங்கள் மற்றும் பொது அமைப்புகளிலும் சிரமதான நடவடிக்கை களை மேற்கொள் ளுமாறு தெரிவித்துள்ளார். (8)

# ஸ்ரீ அம்மா பகவானின் திருமண வைபோகம்



(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ அம்மா பகவானின் திருமண வைபோ கம் இன்று செவ் வாய்க்கிழமை மாலை 4 மணிமுதல் 6.30 மணிவரை நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற வுள்ளது.

அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர் கள் அறிவித்துள்ளனர். (8)

# 1.5 மில்லியன் ரூபா நிதியில் விவசாய கிணறுகள் புனரமைப்பு

(கரணவாய்)

கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சினால் நாடளாவிய ரீதியில் முன்னெடுக் கப்பட்டு வரும் "சமூக சக்தி ஆயிரம் கிராமங்களில் ஆயிரம் வேலைத்திட்டங்கள்" திட்டத்தின் கீழ், கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவிலும் அபிவிருத்திப் பணிகள் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்ட J/349 (கரணவாய் வடக்கு) கிராம அலுவலகர் பிரிவில் உள்ள ஐந்து விவசாயக் கிணறுகளைப் புனரமைப்பு செய்வதற்காக 1.5 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இப்பணிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு கடந்த செவ் வாய்க்கிழமை பாராளுமன்ற உறுப்பினர் ஜெ. ரஜீவன் தலைமையில் ஆரம் பித்து வைக்கப்பட்டது. (8-60)

# யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர்

## பெண்கள் சந்திப்பு நிகழ்வுகளில் பங்கேற்பு!



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் 'பெண்கள் சந்திப்பு' நிகழ்வு களில் கலந்து கொண்டார்.

இதன் போது பெண்களின் சமூக பொருளாதார மற்றும் அபிவிருத்தி தொடர்பான விடயங்கள் குறித்து கலந்துரை யாடப்பட்டது.

குறித்த நிகழ்வு பண்டத்தரிப்பு, மல்லாகம் மற்றும் எழுதுமட்டுவாழ் ஆகிய இடங்களில் நடைபெற்றன.

நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் இ. சந்திரசேகர், தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் ச. சிறிபவானந்தராசா, க. இளங்குமரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (8-33)



யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்துள்ள நல்லை ஆதீனத்திற்கு நேற்றைய தினம் விஜயம் மேற்கொண்ட சுவிஸ் தூதுவர், யாழ்.பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீட பீடாதிபதி பிரம்மஸ்ரீ பத்மநாபசர்மா மற்றும் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆகியோரைச் சந்தித்து நாட்டின் சமகால நிலைமைகள் குறித்து கேட்டறிந்து கொண்டார்.

# ஞாயிற்றுக்கிழமைகளில் கட்டாய விடுமுறை தொடரும்

## பருத்தித்துறை வர்த்தகர் சங்கம் தீர்மானம்

(கரணவாய்)

வர்த்தகர்களுக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் கட்டாய விடுமுறை தீர்மானம் தொடர்ந்து வலுவில் இருக்கும் என பருத்தித்துறை வர்த்தகர் சங்க விசேட பொதுக் கூட்டத்தில் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகரசபை பொது மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு வர்த்தகர் சங்க தலைவர் இரா.மயூதரன் தலைமையில் ஆரம்பமான விசேட பொதுக்கூட்டத்தில் பருத்தித்துறை பிரதேச செயலாளர் சார்பில் பிரதேச செயலக கணக்காளர், நகரபிதா சார்பில் உப தவிசாளர் தே.தேவராஜேந்திரன், நகரசபை செயலாளர் ச.பிரசாத், பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கருணாரத்ன ஆகியோர் சிறப்புப் பங்கேற்பாளர்களாக பங்கேற்றிருந்தனர்.

பெரும்பாலான வர்த்தகர்கள் ஞாயிற்றுக்கிழமை கட்டாய விடுமுறை தீர்மானத்தை தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்கு ஆதரவினை தெரிவித்திருந்தனர். ஒரு வர்த்தகர் மட்டும் ஒத்துழைக்க மறுத்து வெளியேறி இருந்தார்.

இதையடுத்து ஞாயிற்றுக்கிழமைகளில் கட்டாய விடுமுறை என்னும் தீர்மானத்தை தொடர்வது என தீர்மானிக்கப்பட்டது.


எதிர்வரும் நாட்களில் அதனை முழுமையாக நடைமுறைப்படுத்த தேவையான ஒத்துழைப்புகளை வழங்குவதாக பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்டோர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8-60)

# சிறுவர் சந்தை

(யாழ்ப்பாணம்)

யா/ மயிலணி சைவ மகாவித்தியாலய மாதிரி சிறுவர் சந்தை இன்றைய தினம் காலை 8 மணி முதல் 10 மணிவரை மயிலணி முருகன் ஆலய முன்றலில் பாடசாலை அதிபர் பா. பார்த்தீபன் தலைமையில் நடை பெறும். (8)

# வடமராட்சியில் இறால்குளம் தூர்வாரும் நிகழ்வு



(கரணவாய்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட பொற்பதி கிராமத்தில் இறால் குளம் தூர் வாரும் நிகழ்வு அண்மையில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் திருமதி உஷாராணி தலைமையில் இடம்பெற்றது.

குறித்த இறால் உற்பத்தி குளத்தை தூர்வாரும் பணியை பாராளுமன்ற உறுப்பினரும், வடமராட்சி பிராந்திய ஒருங்கிணைப்புக் குழு தலைவருமான ஜெ. ரஜீவன் ஆரம்பித்து வைத்தார்.

இந் நிகழ்வில் திட்டமிடல் பணிப்பாளர், மற்றும் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர்கள், பிரஜா சக்தி தலைவர்கள், கடற்தொழில் சங்கத்தினர், மக்கள் என பலர் கலந்து கொண்டனர். (8- 60)

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# 17 ஆம் ஆண்டு நினைவலைகள்



## அமரர். கந்தையா சாமி

(K.S அம்பாள் மினிபஸ் உரிமையாளர்)

மலர்வு: 01.11.1934 உதிர்வு: 09.06.2009

எம் வாழ்க்கையின் தெய்வம்-அப்பா
எம் வெற்றியின் இரகசியம்-அப்பா
தம்மை வருத்தி எம்மை
தன்னம்பிக்கையோடு வாழ வைத்தவர்-அப்பா
அறிவொளி ஊட்டி
அகிலம் சிறக்க வைத்தவர்-அப்பா
உம் நினைவால் வாடுகிறோம் - அப்பா.

# 05 ஆண்டு நினைவலைகள்



## அமரர்.திருமதி. யசோதா திரவியம்

(K.S அம்பாள் மினிபஸ் உரிமையாளர் சாமி அவர்களின் மகள்)

மலர்வு: 31.05.1966 உதிர்வு: 20.06.2021

அடக்கமாய் அழகாய் ஆளுமையாய்
அயர்வின்றி அன்பு கொடுத்தாய்
ஆலமரமாய் எம்மை அணைத்திருந்தாய்
ஆண்டுகள் பல உருண்டாலும்
அழியாது உன் நினைவுகள்.

(2378)

1/5 பலாலி வீதி,
2 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாரதம்

## பிரக்ஞானந்தாவுடன் செஸ் விளையாடிய முதலமைச்சர்



(டில்லி)

நோர்வே செஸ் தொடரில் விளையாடி, சம்பியன் பட்டத்தை வென்று சாதனை படைத்த இந்திய இளைஞரான பிரக்ஞானந்தா (வயது 20), தமிழ் நாட்டின் முதலமைச்சர் ஜோசப் விஜய்யை நேற்று சந்தித்து, வாழ்த்துப் பெற்றார்.


கடந்த சனிக்கிழமை நடை பெற்ற நோர்வே செஸ் தொடரின் நிறைவு நாள் போட்டியில் பல நாட்டு வீரர்களைப் பின்தள்ளி, இறுதிச் சுற்றில் ஜேர்மனி செஸ் வீரரான வின்செண்ட் கீமரை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை வென்று, இந்திய செஸ் வீரரான பிரக்ஞானந்தா சாதனை படைத்தார். அதனையடுத்து, அவர் தமிழ்நாட்டின் முதலமைச்சரைச் சந்தித்தார்.

அவ்வேளை விஜய் பிரக்ஞானந்தாவுக்கு தனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்ததோடு, அந்த வீரரோடு செஸ் விளையாடினார்.

இது தொடர்பாக பிரக்ஞானந்தா கூறுகையில்,

“தமிழ்நாட்டின் முதலமைச்சர் விஜய் சேர் என்னை அழைத்து பாராட்டியது மிகவும் சந்தோஷமாக இருக்கிறது. விஜய் சேர் நன்றாக செஸ் விளையாடினார். நான் வெற்றி பெற்றாலும் அவர் இவ்வளவு நன்றாக விளையாடுவார் என்று எனக்கு தெரியாது. அத்துடன் எனக்கு 50 இலட்சம் ரூபாய் ஊக்கத் தொகையும் வழங்கினார்” என்றார். (3)

## வட கொரியா சென்றடைந்தார் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்



(பியோங்யாங்)

2019 ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதன் முறையாக உத்தியோகபூர்வ விஜயமாக சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் வடகொரியாவுக்கு சென்றுள்ளார்.


பெய்ஜிங்கில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் ஆகியோரைத் தனித் தனியாகச் சந்தித்ததைத் தொடர்ந்து ஜியின் இந்தப் பயணம் அமைந்துள்ளது.

இச் சந்திப்பின் போது அணு ஆயுத ஒழிப்பு, அமெரிக்க உறவுகள் மற்றும் இரு கொரிய நாடுகளுக்கு இடையேயான மோதல் ஆகியவை நிகழ்ச்சி நிரலில் இடம்பெறக்கூடும்.

சீனாவின் உயர்மட்டத் தூதர் வாங் யி கடந்த ஏப்ரல் மாதம் பியோங்யாங்கிற்குப் பயணம் மேற்கொண்டார். அப்போது, பெய்ஜிங் குடன் தகவல் தொடர்பை மேம்படுத்த கிம் விருப்பம் தெரிவித்தார்.

மூலோபாய ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்ததும், அதே சமயம் மிகவும் கணிக்க முடியாததுமான, ரஷ்யாவுடன் நெருங்கிப் பழகிவரும் ஒரு கூட்டாளியின் மீது பெய்ஜிங் தனது செல்வாக்கை மீண்டும் நிலைநாட்ட முயற்சிக்கும் வேளையில் இந்தப் பயணம் அமைந்துள்ளது. (3)

# மத்திய கிழக்கில் தீவிரமடைந்



டெஹ்ரா

இஸ்ரே
சரமாரிய
நடத்திய
பதிலடித்
யுள்ளதா
போர் மே

ஈரானுடனான பரந்த போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஒரு ஒப்பந்தத்திற்கு வழி வகுக்கும் வகையில், லெபனானில் தனது தாக்குதல்களை நிறுத்துமாறு ட்ரம்ப் இஸ்ரேலை வலியுறுத்தி வருகிறார்.

எனினும், கடந்த வாரம் லெபனானுக்கான போர் நிறுத்தத் திட்டத்தை அமெரிக்கா அறிவித்த பின்னர், இஸ்ரேல் ஞாயிற்றுக்கிழமை முன்னதாக பெய்ரூட் பகுதியில் முதல் முறையாகத் தாக்குதல் களை நடத்தியது. இதற்குப் பதிலடியாக ஈரான், இஸ்ரேலிய இலக்குகள் மீது ஏவுகணைகளை வீசி சரமாரியா கத் தாக்கியதால், அமெரிக்க-ஈரான் அமைதிப் பேச்சுவார்த்தைகள் ஆபத்தில் சிக்கின.

ஆனால், பரந்த போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஒரு உடன்பாடு எட்டப்படும் தூரத்திலேயே உள்ளது என்று ட்ரம்ப் வலியுறுத்தினார்.

இந்த அண்மைய மோதல்கள், திங்கட்கிழமை காலை வர்த்தகத்தில் எண்ணெய் விலைகளை 3 சதவீதத்திற்கும் மேல் உயர்த்தின.

பிரெண்ட் ரக மசகு எண்ணெய் எதிர்கால விலை மீண்டும் ஒரு பீப்பாய்க்கு 96 டொலருக்கு மேல் சென்றது.

அத்துடன் ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல் படை இது ஒரு தொடக்கம் மட்டுமே என்றும், “முழு ஒரு வாரகாலம் தொடர்ச்சியான ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்கள் நடைபெறும்” என்றும் எச்சரித்துள்ளது. இந்த அறிவிப்பு மத்திய கிழக்கு பிராந்தியத்தில் மேலும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. (3)

## உத்தரகாண்டில் சார்தாம்

# 7 வாரங்களில்

# 165 பக்தர்கள் உ

(டேராடூன்)

உத்தரகாண்ட் மாநிலத்தில் நடைபெற்று வரும் சார்தாம் யாத்திரையின் போது கடந்த 49 நாட்களில் ஏற்பட்ட பல்வேறு சாலை விபத்துகளில் மொத்தம் 165 பக்தர்கள் உயிரிழந்துள்ளனர் என மாநில நிர்வாகம் தெரிவித்துள்ளது.

சார்தாம் யாத்திரையின் முக்கிய தலங்களான கேதார்நாத், பத்ரிநாத், யமுனோத்ரி மற்றும் கங்கோத்ரி செல்லும் மலைப் பாதைகளில் ஏற்பட்ட விபத்துகளே இந்த உயிரிழப்புகளுக்கு காரணமாக உள்ளதாக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

உயிரிழந்தவர்களில் கேதார்நாத் வழித்தடத்தில் 80 பேரும், பத்ரிநாத் வழித்தடத்தில் 48 பேரும், யமுனோத்ரி வழித்தடத்தில் 21 பேர் மற்றும் கங்கோத்ரி வழித்தடத்தில் 16 பேரும் உயிரிழந்துள்ளனர்.



மலைப் பாதைகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ...ல் மீண்டும் ...ந்த போர்

...ான்

**...லிய இலக்குகள் மீது ஈரான் ...மாக ஏவுகணைத் தாக்குதல்களை ...தைத் தொடர்ந்து இஸ்ரேலும் ... தாக்குதல்களை நடத்தி ...ல் மத்திய கிழக்கில் மீண்டும் ...கங்கள் சூழ்ந்துள்ளன.**



## ... யாத்திரை ... மட்டும் ...யிரிழப்பு



சவாலான நிலை, அதிக போக்குவரத்து நெரிசல், மோசமான வானிலை மற்றும் சில இடங்களில் சாரதிகளின் அலட்சியம் போன்ற காரணங்களால் விபத்துகள் ஏற்பட் டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

பக்தர்கள் மற்றும் வாகன சாரதிகளின் பாதுகாப்பு வழிகாட்டுதல்களை கடைப்பிடிக்க வேண்டும் என மாநில அரசு வலியுறுத்தியுள்ளது.

மேலும், யாத்திரை பாதைகளில் கண்காணிப்பு, அவசரகால மீட்பு வசதிகள் மற்றும் சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)

# பிலிப்பைன்ஸை உலுக்கிய சக்தி வாய்ந்த நிலநடுக்கம்




(மணிலா)

பிலிப்பைன்ஸின் தெற்குப் பகுதியில் திங்கட்கிழமை அதிகாலை ஏற்பட்ட 7.8 ரிக்டர் அளவிலான சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து, அந் நாட்டின் முக்கிய தீவான மிண்டானாவோவின் ஆறு கரையோர பகுதிகளில் சுனாமி அலைகள் பதிவாகியுள்ளது.

இதனை பிலிப்பைன்ஸ் எரிமலையியல் மற்றும் நிலநடுக்கவியல் நிறுவனம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

சுனாமி அலைகளின் தாக்கம் இன்னும் தொடர்ந்து பதிவாகி வருவதால், சுனாமி எச்சரிக்கை இன்னும் மீளப்பெறப்படவில்லை என அதிகாரிகள் விடுத்துள்ள அவசர எச்சரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனர்த்த முகாமைத்துவப் பிரிவினர் வெளியிட்டுள்ள அண்மைக்காலப் புள்ளிவிபரங்களின் படி,

அந்நாட்டு நேரப்படி காலை 7.42 முதல் 8.45 வரை மிண்டானாவோவின் தெற்கு கடற்கரையை ஒட்டிய பகுதிகளில் சுனாமி அலைகள் அவதானிக்கப்பட்டுள்ளன. இதில் பதிவான மிக உயர்ந்த சுனாமி அலையானது 1.4 மீற்றர் (4.6 அடி) உயரத்தைக் கொண்டிருந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இயற்கை அனர்த்தத்தினால் இதுவரை குறைந்தது 15 பேர் உயிரிழந்துள்ளதுடன், 129 பேர் படுகாயமடைந்து அவசரச் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நிலநடுக்கத்தின் அதிர்வு தாங்காமல் வணிக வளாகங்கள் உட்பட குறைந்தது 37 பிரதான கட்டடங்கள் கடும் சேதங்களுக்கு உள்ளாகியுள்ளதாகப் பொலிஸார் மதிப்பிட்டுள்ளனர்.

கரையோரப் பகுதிகளில் வாழும் ஆயிரக்கணக்கான நுகர்வோரும் பொது மக்களும் பாதுகாப்பான உயர் நிலப் பகுதிகளை நோக்கி அவசரமாக அனுப்பப்பட்டு வரும் நிலையில், கரையோர பாதுகாப்புப் படையினர் தீவிர கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். (3)

# டெஹ்ரானில் அவசரமாக மூடப்பட்ட சர்வதேச விமான நிலையம்



(டெஹ்ரான்)

ஈரான் மற்றும் இஸ்ரேலுக்கு இடையிலான பதற்றம் தீவிரமடைந்துள்ள நிலையில் ஈரானின் தலைநகரான டெஹ்ரான் நகரில் அமைந்துள்ள இமாம் கொமேனி சர்வதேச விமான நிலையத்திற்கான அனைத்து உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் விமானச் சேவைகளும் மறு அறிவித்தல் வரை அவசரமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ஈரான் நேற்று முன்தினம் இரவு இஸ்ரேல் மீது மேற்கொண்ட ஏவுகணைத் தாக்குதலைத் தொடர்ந்து பாதுகாப்பு அச்சுறுத்தல்களை கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்காசியாவில் நிலவி வரும் போர்ச் சூழ்நிலையை அடுத்து ஈரானின் சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை வான்வெளிக் கட்டுப்பாடுகளை அமுல்படுத்தியுள்ளதுடன், விமான நிலையத்திற்கான அனைத்து சேவைகளும் அடுத்த அறிவிப்பு வெளியாகும் வரை இரத்து செய்யப்பட்டுள்ளன.

இதற்கு முன்னர் பாதுகாப்பு காரணங்களால் ஈரானின் மேற்கு வான் வெளியும் மூடப்பட்டிருந்தது. பல வாரங்களாக மூடப்பட்டிருந்த இமாம் கொமேனி சர்வதேச விமான நிலையம் கடந்த ஏப்ரல் மாதம் மீண்டும் திறக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது மீண்டும் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைஞர்களுக்கு கைவிலங்கா!

# சங்கீத்தனை விடுவிக்கக்கோரி வவுனியாவில் போராட்டம்!

(வவுனியா)

**பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள சொல்லிசை பாடகர் சங்கீத்தனை உடனடியாக விடுவிக்கக் கோரி வவுனியா பழைய பேருந்து நிலையப் பகுதியில் நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**




இதன்போது, கருத்துச் சுதந்திரத்தையும் கலைஞர்களின் உரிமைகளையும் மதிக்க வேண்டும் என வலியுறுத்திய போராட்டக்காரர்கள், சங்கீத்தனை நிபந்தனையின்றி விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுத்தனர்.

கலைஞர்கள் மீது மேற் கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பிலும் தமது கவலையை தெரிவித்தனர்.பழைய பேருந்து நிலைய பகுதி யில் ஆரம்பமான குறித்த போராட்டம் அங்கிருந்து மணிக்கூட்டு கோபுரசந்தி வரை ஊர்வலமாக சென்று மீண்டும் போராட்ட இடத்தை அடைந்தது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கலைஞர்களுக்கு கைவிலங்கா, பாடுவதும் ஆடுவதும் பயங்கரவாதமா போன்ற வாசகங்கள் தாங்கிய பதாகைகளை ஏந்தியிருந்ததுடன், கோஷங்களையும் எழுப்பியிருந்தனர்.

வவுனியா கலைஞர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த போராட்டத்தில் அரசியல் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொது மக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (8)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார சந்தைவிலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 450 | 280 | 450 | 550 | 500 | 400 | 350 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | -- | 200 | -- | 330 |
| பச்சைமிளகாய் | 450 | 400 | 400 | 400 | 500 | 450 | 450 |
| தக்காளி | 800 | 700 | 800 | 600 | 800 | 750 | 650 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 180 | 200 | 140 | 200 | 200 | 120 |
| கோவா | 300 | 350 | 350 | 260 | 300 | -- | 350 |
| கரட் | 350 | 480 | 500 | 350 | 500 | 500 | 450 |
| பூசணி | 120 | 120 | 120 | 100 | 160 | --. | 80 |
| புடோல் | 250 | 200 | 200 | 230 | 320 | 250 | 300 |
| வாழைக்காய் | 120 | 80 | 100 | 80 | 100 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 300 | 450 | 400 | -- | 380 |
| பெரிய வெங்காயம் | 180 | 230 | 250 | -- | 240 | -- | -- |
| பாகற்காய் | 1300 | 2000 | 2000 | 2000 | 2000 | -- | 850 |
| வெண்டக்காய் | 200 | 150 | 300 | 150 | 400 | 200 | 200 |
| கருணைக் கிழங்கு | 300 | 350 | 200 | 300 | 400 | -- | 300 |
| பயற்றங்காய் | 300 | 250 | 300 | 400 | 250 | 450 | 250 |
| லீக்ஸ் | 400 | 450 | 500 | 400 | 400 | -- | 400 |
| பீற்றூட் | 450 | 500 | 500 | 350 | 600 | 400 | 450 |
| கறிமிளகாய் | 600 | 600 | 500 | 450 | 600 | 400 | 450 |
| முருங்கைக்காய் | 600 | 600 | 450 | 450 | 800 | 600 | 750. |
| போஞ்சி | 650 | 650 | 600 | 600 | 500 | 600 | 450 |
| கத்தரிதம்புள்ள | 250 | 200 | 300 | -- | 400 | -- | -- |
| கீரை - 1 பிடி | 150 | 120 | 150 | 110 | 120 | -- | 150 |
| தேசிக்காய் | 800 | 500 | 400 | 550 | 500 | 450 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 80 | 120 | 100-140 | -- | 90 |
| இராசவள்ளி | 350 | 400 | 350 | 350 | 300 | -- | 320 |
| வெங்காயப்பூ | 600 | 600 | 800 | -- | 500 | -- | -- |
| முள்ளங்கி | 200 | 280 | 200 | 150 | 300 | 250 | 250 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 200 | -- | 60 | -- | 50 |
| வல்லாரை | 100 | 70 | 80 | -- | 80 | -- | 40 |
| ஈரப்பலா | -- | -- | 100 | -- | 250 | -- | -- |

# கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவைச் சேர்ந்த றமேஸ்குமார் பிரதீபன் என்பவரது தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம் கண்டெடுக்கப்பட்டு யாழ்ப்பாணம் வலம்புரி பத்திரிகை காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் வலம்புரி பத்திரிகை காரியாலயத்திற்கு அலுவலக நேரத்தில் வருகை தந்து பெற்றுக்கொள்ளலாம். (8)

# இராசிபலன்

09.06.2026
வைகாசி 26, செவ்வாய்க்கிழமை
நவமி முன்னிரவு 9.38 மணிவரை

உத்திரட்டாதி பின்னிரவு 05.05 மணிவரை
சுப நேரம் -10.22-11.52 மணிவரை
இராகு காலம் -2.52-4.22 மணிவரை

சந்திராஷ்டமம்- பூரம்.

வளவன்

**மேஷம்:** வழக்கத்தைவிட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை உருவாகும், வழிபாட்டால் குதுகலம் காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**ரிஷபம்:** வளர்ச்சிப் பாதைக்கு வித்திட்டவர்களை சந்தித்து மகிழ்வீர்கள், இனிய செய்திகள் வந்து சேரலாம்,செல்வாக்கு மேலோங்கும் நாள், மனதில் இனம் புரியாத சந்தோசம் குடிகொள்ளும்.

**மிதுனம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொழில் வளர்ச்சி அதிகரிக்கும், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள்.

**கடகம்:** கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், மறதியால் தவறிய காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள்,பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்:** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், பொது வாழ்வில் கௌரவக் குறைவுகள் ஏற்படலாம்.

**கன்னி:** குடும்பத்தினருடன் குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், பயணங்கள் செல்லப் போட்ட திட்டங்கள் கைகூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**துலாம்:** பிள்ளைகளால் உதிரிவருமானங்கள் வந்து சேரலாம், தலைமைப் பதவிகள் உங்களைத் தேடி வரலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், வியாபாரவிருத்தியுண்டு.

**விருச்சிகம்:** பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**தனுசு:** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள்,எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**மகரம்:** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கும்பம்:** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள், பயணங்களால் பலனுண்டு, பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**மீனம்:** திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், விருந்துகளில் கலந்து மகிழ்வும் வாய்ப்புண்டு, கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள்.

கவனமும், முயற்சியும் அதிர்ஷ்டத்தைக் கொண்டு வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரிசனம் 02

XXI

## இந்து ஆலயங்களும் அவற்றின் பரிபாலனமும்

புருசோத்தமன்




(நேற்றைய தொடர்ச்சி)

கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்களின் இலக்கியப் பேராற்றலால் தமிழக மக்கள் அவர் மீது மிகுந்த அன்பும் பக்தியும் கொண்டுள்ளனர்.

அவரைத் தமிழகத்திற்கு வரவழைப்பதில் - அவரின் உரையைக் கேட்பதில் தமிழக மக்களும் தமிழக அமைப்புகளும் கொண்டுள்ள ஈடுபாட்டை நேரில் கண்டு வியந்தவன் யான்.

உண்மை.அயோத்தியில் அமைக்கப்பட்ட இராமர் கோயிலுக்கு குட முழுக்கு நடைபெறுவதற்கு முன்னதாக, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் இராமேஸ்வரத்தைத் தரிசிப்பதற்காகவும் இராமேஸ்வரத்தில் உள்ள புனித தீர்த்தங்களில் நீராடுவதற்குமாக வருகிறார்.

அங்ஙனம் இராமேஸ்வரத்திற்கு வருகின்ற பாரதப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கம்ப இராமாயணத்தை எடுத்துக் கூறுவதற்கான ஏற்பாடுகள் நடந்தாகின்றன.

குறித்த ஏற்பாடுகளில் கம்பராமாயணத்தை பிரதமர் மோடிக்கு எடுத்துக் கூறவல்ல - கம்பராமாயணத்தில் துறைபோன - அதன் இலக்கிய நயத்தைச் சொட்டச் சொட்டச் சொற் திறத்துடன் தரவல்ல தமிழ் இலக்கியப் பேராற்றல் கொண்டவர் யார்? எனத் தமிழக அறிஞர் பெருமக்கள் கூடி ஆராய்கின்றனர்.

ஈற்றில், பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு கம்பராமாயணத்தை எடுத்துக் கூறவல்லவர் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் என்று அந்த அறிஞர் சபை தீர்மானிக்க, இராமேஸ்வரத்திற்கு வருகை தந்த பாரதப் பிரதமர் நரேந்திர மோடிக்கு எங்கள் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் இராமாயணத்தை எடுத்துக் கூறியதென்பது எங்கள் ஈழத் தமிழுக்குக் கிடைத்த பெரும் புகழ்.



இப் புகழை நம்மில் பலர் இன்னமும் அறியாமல் இருந்தாலும் ஈழத் தமிழ் வரலாறு அந்தப் பெரும் புகழைப் போற்றும் காலம் வரும் என்பது சத்தியமான உண்மை.

இதற்கும் அப்பால், தமிழகத்தில் கம்பவாரிதியின் திருக்குறள் வகுப்புகள் நடைபெறுகின்ற போது அதில் தமிழகத்தில் கற்றறிந்த சமூகம் பங்கேற்று பயன்பெறுவதில் காட்டுகின்ற ஆர்வம் சாதாரணமான தன்று.

ஆம், அண்மையில் நம் நாட்டிற்கு வருகை தந்த இந்திய துணை ஜனாதிபதி சி.பி.இராதாகிருஷ்ணன் அவர்கள் கொழும்பில் வைத்து பிரத்தியேகமாக கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்களைச் சந்தித்தார் என்பதற்குள் கம்பவாரிதிக்குத் தமிழகத்தில் இருக்கக் கூடிய உயர்ந்த மதிப்பின் உன்னதம் வெளிப்படும்.

எல்லாவற்றுக்கும் மேலாக கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் கம்பன் விழாவை நடத்துகின்ற தமிழ்ப் பணி சாதாரணமானதன்று.

ஆக, தமிழகத்தில் கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்களுக்கு பாதபூஜை இடம்பெற்றமை என்பது அவர் மீது தமிழக மக்கள் கொண்ட அன்பும் மதிப்பும் மரியாதையும் என்பதற்கப்பால் அவரிடம் இருக்கக் கூடிய பேச்சாற்றலை இறைவன் அவருக்குக் கொடுத்த கொடையாகவும் அந்தக் கொடையை நாங்களும் கேட்கவும் சிந்திக்கவும் அனுபவிக்கவும் கிடைக்கப் பெற்றதைப் பெரும் பேறாகவும் கருதியே அவருக்கான பாதபூசை இடம்பெற்றதென்பதே உண்மையாம்.

எனவே யார் எத்தகைய விமர்சனங்களை - கருத்துப் பகிர்வுகளை முன்வைத்தாலும் அதில் நயத்தக்க நாகரிகத்தைப் பேணுங்கள்.மற்றவர்களுடைய மனங்களை நோகடிக்காமல் பார்த்துக் கொள்வது மிகவும் முக்கியமானது.

இன்று நாம் சரியென நினைப்பது நாளை தவறு என்ற முடிவுக்கு வருவது தான் இயற்கை.

எனவே நாம் நாம் கருதுகின்ற- முன்வைக்கின்ற கருத்து க்கள் என்பன நம்மளவில் ஏற்புடையதேயன்றி அதனை அனைத்து மக்கள் சமூகமும் ஏற்றுக் கொள்ளும் என நினைப்பது பொருத்தமன்று.

ஆகையால் விமர்சனங்கள் மற்றவர்களுக்கும் முன்மாதிரியாக அமையட்டும்.

அதில் பண்புடைமை மேலோங்கட்டும் என்ற கோரிக்கையோடு இந்து ஆலயங்களும் அவற்றின் பரிபாலனமும் என்ற தரிசனத்தை தொடர்ந்து தரிசிக்கலாம்.

(நாளை தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


கல்கியின் பாகம் - 5

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

1060





கடம்பூரிலிருந்து பெரிய பழுவேட்டரையரையும் தருவிக்க வேண்டும். அருள்மொழிக்கு இராஜ்யம் ஆளும் ஆசை இல்லை என்பதை அவருக்குத் தெரிவித்து, அவருடைய சம்மதம் பெற்ற பிறகுதான், தஞ்சைக்கு அவனை அழைத்துப் போக வேண்டும்

இவ்விதம் தனக்குள் சிந்தித்து முடிவு செய்துகொண்டு, தந்தையிடம் கூடச் சொல்லிக் கொள்ளாமல், அன்னையிடமும் அநிருத்தரிடமும் மட்டும் சொல்லிவிட்டு, இணை பிரியாத வானதியையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டாள். பழையாறைக்குப் போகுமுன்பு குடந்தை ஜோதிடரை இன்னொரு தடவை பார்த்து விட விரும்பினாள். கவலை அதிகம் ஏற்படும்போது வருங்காலத்தைப் பற்றி ஜோதிடம் பார்த்து அறிய விரும்புவது மனித இயல்பு அல்லவா?

வழக்கம் போல் அம்மன் கோவிலுக்கு அருகில் ரதத்தை விட்டு விட்டு, ஜோதிடர் வீட்டுக்குள் புகுந்தாள். ஜோதிடரிடம் அவளுடைய கவலையைத் தெரிவிக்கத் தொடங்கிச் சிறிது நேரம் கூட ஆகவில்லை. அதற்குள் வீட்டு வாசலில் ஏதோ தடபுடல் நடைபெறும் சத்தம் கேட்டது. முக்கியமாக, பழுவேட்டரையரின் ஹங்காரம் அவளுக்கு ரோமாஞ்சனம் உண்டு பண்ணியது. அந்த மாதிரி கம்பீரமாக ஹங்காரம் செய்யக் கூடியவர் பெரிய பழுவேட்டரையர் ஒருவர்தான். தடுக்க முயன்ற ஜோதிடரின் சீடனைத் தள்ளிவிட்டுப் பழுவேட்டரையர் உள்ளே வருவதாகக் காணப்பட்டது. அவர் எப்படி இங்கே வந்தார்? எதற்காக வருகிறார்? அதுவும் இந்த வேளையில்?

ஆகா! ஒருவேளை ஜோதிடம் கேட்கத்தான் வருகிறார் போலும்! அவர் ஜோதிடருடன் பேசுவதைக் கேட்டால் ஒரு வேளை அவருடைய மனத்தில் உள்ள எண்ணங்கள் தெரியக் கூடும். இராஜ்யத்துக்கும், இராஜ குலத்துக்கும் பெரிய நெருக்கடி நேர்ந்திருக்கும் இச்சமயத்தில், பெரிய பழுவேட்டரையரின் மனப்போக்குத் தெரிந்தால் எவ்வளவோ சௌகரியமாயிருக்கும்.

அதைத் தெரிந்து கொள்ள இப்போது ஒரு சந்தர்ப்பம் நேர்ந்திருக்கிறது. மேலும், தானும், வானதியும் அங்கு இருப்பதைப் பார்த்தால் அவர் என்ன எண்ணிக் கொள்வாரோ என்னமோ ஏன்? தவறாகத்தான் எண்ணிக் கொள்வார்! சந்தேகமில்லை. ஆகையால் அவர் கண்ணில் படாமல் மறைந்திருப்பது தான் நல்லது.

குந்தவை, ஜோதிடரிடம் ஜாடையினால் தனது நோக்கத்தைத் தெரிவித்துவிட்டு வானதியையும் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு அவசரமாக அடுத்த அறைக்குள்ளே சென்றாள். அவர்கள் புகுந்த அறையின் கதவு சாத்தப்பட்ட தட்சணமே பழுவேட்டரையர் உள்ளே பிரவேசித்தார். பரபரப்புடன் எழுந்து நின்று கும்பிட்ட ஜோதிடரை உற்றுப் பார்த்துவிட்டுச் சுற்று முற்றும் நோக்கினார். அவர் முகத்தில் வியப்புக்கும், ஏமாற்றத்துக்கும் அறிகுறி தென்பட்டது. இது ஒரு கண நேரந்தான்.


உடனே சமாளித்துக் கொண்டு, "ஜோதிடரே! நான் யார் தெரிகிறதா? தனாதிகாரி பெரிய பழுவேட்டரையனே தான்! ஏன் இவ்வாறு பேந்த விழிக்கிறீர்? அவ்வளவு உருமாறிப் போயிருக்கிறேனா? உம்மால் எனக்கு ஒரு முக்கியமான காரியம் ஆக வேண்டியிருக்கிறது! ஒரு பெரிய உதவி நீ எனக்குச் செய்ய வேண்டும். முதலில் சாப்பிடுவதற்கு ஏதேனும் இருந்தால் கொண்டு வாரும் ரொம்பப் பசியாயிருக்கிறது. சாப்பிட்டுக் கொண்டே சொல்ல வேண்டியதைச் சொல்கிறேன்" என்றார்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## பள்ளிக்குச் சென்ற சிட்டுக்குருவிகள்



ஆழ்வார்பேட்டையில் பேருந்து நிற்கும் இடத்தில் ஓர் அரசமரம் இருக்கிறது. அந்த மரக்கிளை ஒன்றில் கூடுகட்டிக் கொண்டு இரண்டு சிட்டுக் குருவிகள் இருந்தன. அந்தச் சிட்டுக் குருவிகளுக்கு இரண்டு சின்னச் சிட்டுக்கள் இருந்தன. அந்தச் சின்னச் சிட்டுகள் இரண்டும் அடித்த கொட்டத்திற்கு அளவே இல்லை.

ஒரு சிட்டுக்குருவி ஒரு கிளையில் போய் ஒளிந்து கொள்ளும். இன்னொன்று அதைத் தேடிக்கொண்டு மரத்தைச் சுற்றிச் சுற்றிவரும். அது சோர்ந்து போய் ஒரு கிளையில் உட்கார வரும். அப்பொழுது பார்த்து முதல் குருவி விருட்டென்று பறக்கும். உடனே அதை விரட்டிக்கொண்டு இரண்டாவது குருவி புறப்படும்.

இரண்டும் சேர்ந்து கத்திக் கொண்டு பறந்தோடுவதைப் பார்த்தால் எதையோ விரட்டிப்பிடிக்கப் போவதைப்போல்இருக்கும்.

அந்த மரத்தில் இருக்கும் எல்லாப் பறவைகளுக்கும் அந்த இரண்டு சிட்டுக் குருவிகளும் செல்லச் சிட்டுக்கள். அவை விளையாடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தாலே மற்ற பறவைகளுக்குப் பொழுது போய்விடும்.

இந்தச் சிட்டுக்களின் அம்மாச் சிட்டுக்கு ஒரே ஒரு ஆசை. இந்த இரண்டு சிட்டுகளையும் எங்காவது ஒரு நல்ல பள்ளிக்கூடத்தில் சேர்த்துப் படிக்க வைத்து விட வேண்டும் என்பது தான் அதன் ஆசை.

நான்கு எழுத்துப் படித்து விட்டால் அவை பேசும் அழகைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம். இப்படி ஒரு ஆசையை அந்த அம்மாச் சிட்டு மனத்தினுள் வளர்த்துக் கொண்டு இருந்தது.

அம்மாவின் ஆசை தெரியாமல் அந்தச் சின்ன சிட்டுக்கள் இரண்டும் விளையாட்டிலேயே ஈடுபட்டிருந்தன.

ஒரு நாள் அந்த அம்மாச் சிட்டு ஆழ்வார் பேட்டையில் இருந்த ஆங்கிலப் பள்ளிக் கூடத்தின் பக்கமாகப் பறந்து சென்றது. வெள்ளை வெளேரென்று அழகாக இருந்த அந்தப் பள்ளிகூடத்தின் எதிரில் ஆசிரியை ஒருத்தி மயில் போல் நின்று கொண்டிருந்தாள்.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதைத்தவன் உறங்கினாலும் விதைகள் உறங்கு வதில்லை.

~ சே குவேரா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பிரதேச செயலாளர்கள் எடுத்த தற்துணிவான முடிவு

இலங்கை நிர்வாக சேவையில் அனைவ ராலும் மதிக்கப்பட்ட பெரேரா என்பவரை அறி யாத அதிகாரிகள் எவரும் இருக்க முடியாது.

அந்தளவுக்கு அவரின் நிர்வாகத் திறமை யும் பொதுமக்களுக்கு சேவை வழங்க வேண்டு மென்ற அவரின் உயரிய மனப்பாங்கும் அவரை இந்த நாட்டுக்கு அறிமுகப்படுத்தியது.

கடந்த காலத்தில் அரசாங்கத்தினால் முன் மொழியப்பட்ட சம்பள ஆணைக்குழு பெரேரா வின் தலைமையில் இயங்கியதால், அது **"பெரேரா சம்பள ஆணைக்குழு"** என்றாயிற்று.

இலங்கை நிர்வாக சேவையில் அவரின் சிறப்பு என்ன என்ற கேள்வி உங்களிடம் ஏற்படலாம். ஆம், அரச சுற்றுநிருபங்களை உள்ளபடி உள்வாங்கி சுற்றுநிருபத்தால் தன்னைக் கட்டிப் போட்டவரா? அந்தப் பெரேரா என்றால் அதுதான் இல்லை.

மாறாக, அரச அதிபராக இருக்கக்கூடிய தனது எல்லைக்குட்பட்ட அனைத்து உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளையும் வினைத்திறன் உடையதாக ஆக்குவதில் அவர் அதீத கருசனை கொண்டிருந்தார்.

அந்தந்த உதவி அரசாங்க அதிபர்கள் இயங்கு நிலையில் இருக்கக் கூடியவர்க ளாகத் தங்களின் ஆற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும் எனக் கருதினார்.

இதனைச் செய்வதாக இருந்தால், முத லில் உதவி அரசாங்க அதிபர்கள் தத்தம் பணிமனைகளில் இருந்து, அங்கு வருகின்ற பொதுமக்களை அணுக வேண்டும்.

இதன் பொருட்டு அரச அதிபராக இருந்த பெரேரா தனது அலுவலகத்துக்குக் காலை வேளையில் சென்று; அத்தனை உதவி அரசாங்க அதிபர்களுக்கும் தொலைபேசி அழைப்பை எடுத்து; குட்மோர்னிங் (Good Morning) என்று கூறிக்கொள்வார்.

இதன் காரணமாக உதவி அரசாங்க அதி பர்கள் காலையிலேயே அலுவலகத்திற்கு வந்து விடுவார்களாம். தங்களின் அரச அதிபர் பெரேரா குட்மோர்னிங் சொல்லும் போது, தாங்கள் அங்கு பிரசன்னமாக இருக்க வேண்டும் என்பதற்காக.

அவர்கள் கடைப்பிடித்த அந்தப் பழக்கம் வழக்கமான போது, உதவி அரசாங்க அதிபர் கள் தங்கள் பணிமனைகளில் குந்தியிருந்து பணியாற்றினர். இந்த நிலைமை அன்றைய அனைத்து உதவி அரசாங்க அதிபர் பணி மனைகளிலும் காணப்பட்டன.

ஆனால் என்று உதவி அரசாங்க அதிபர் பணிமனை பிரதேச செயலகங்களாக மாறி - உதவி அரசாங்க அதிபர்கள் பிரதேச செயலா ளர்களானார்களோ அன்று பிடித்த நாசம் எங்கள் பிரதேச செயலகங்களில் பிரதேச செயலாளர்களின் கதிரைகள் வெறுமையாக இருந்ததே அதிகம் என்றாயிற்று.

நிலைமை இதுவாக இருக்கையில், பொது மக்களுக்குரிய நாளான திங்கட்கிழமை களில் எந்தக் கூட்டங்களை எவர் நடத்தி னாலும் அதில் பங்குபற்றுவதில்லை என்ற ஒரு தற்துணிவான தீர்மானத்தை இலங்கை பிரதேச செயலாளர்கள் சங்கம் தற்போது எடுத்திருப்பது உண்மையில் பாராட்டப்பட வேண்டியது.

ஆம், இந்தத் தீர்மானம் சரியாக அமுல் படுமாயின், அந்தத் திங்கள் பொழுதிலேனும் எங்கள் பிரதேச செயலர்களைப் பொதுமக்கள் தரிசிக்க முடியும்.

### சட்டமா அதிபரின் பரிந்துரைகளை ஏற்று

# மாகாண சபைத் தேர்தலை பழைய முறையில் நடத்துங்கள்

### ஜனாதிபதியிடம் ரெலோ கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மாகாண சபைத் தேர்தல்களுக்கு தடங் கலாக இருக்கும் சட்டச் சிக்கல்களை தாண்டு வதற்குப் பாராளுமன்றத் தெரிவு குழுவுக்கு முன் வைக்கப்பட்ட சட்டமா அதிபர் திணைக்களத் தின் பரிந்துரைகளுக்கு அமைய அரசு தேர்தல் களை விரைந்து நடத்த வேண்டும் என ரெலோ அமைப்பானது அரசி டம் கோரிக்கை விடுத் துள்ளதாக அதன் பேச் சாளர் சுரேந்திரன் தெரி வித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகை யில்,

சட்டமா அதிபரினால் பரிந்துரைக்கப்பட்ட 2017ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட மாகாண சபை தேர்தல் கள் திருத்தச் சட்டத்தை இரத்து செய்து 1988 சட்டத்தின் கீழ் இருந்த முந்தைய தேர்தல் முறைக்கு திரும்புதல் மூலம் மாகாண சபை தேர்தலை விரைந்து நட த்த வழி உள்ளது.

இருப்பினும் அந்த பரிந்துரையை கருத்தில் கொள்ளாது அரச தரப்பு புதிய திருத்தச் சட்டம் ஒன்றைக் கொண்டுவர வேண்டும் என்றும் அதில் பெண்கள் மற்றும் இளை ஞர்களுக்கு அதிக ஒது க்கீடுகளை செய்வது பற்றியும் ஆலோசிக்க வேண்டும் என்று கூறு வது காலத்தை வீணடிக் கும் செயற்பாடாகும்.

ஏற்கெனவே தமிழர் தரப்புக் கூறி வருகின்ற பழைய தேர்தல் முறை யின் மூலம் தேர்தலை நடத்துவதற்கு ஏதுவாக சட்டமா அதிபர் திணை க்களமும் பரிந்துரை செய்துள்ளது.

இதைக் கருத்தில் கொள்ளாது அவர்கள் பரிந்துரைத்த மற்றைய விடயங்களை அரசு கவ னத்தில்எடுப்பது மாகாண சபைத் தேர்தல்களை பிற்போடுவதற்கு முய ற்சி செய்வதாகவே அமையும் என்றார். (ந-7)

# விமல் வீரவன்சவின் ஊழல் சாட்சியங்கள் பதிவு

அமைச்சராகப் பணி யாற்றிய காலத்தில் தனது சட்டபூர்வ வருமானத்தை மிஞ்சிய வகையில் 75 மில்லியன் ரூபாவிற்கும் அதிக சொத்துக்களை சட்டவிரோதமான முறை யில் ஈட்டியமை தொடர் பில், முன்னாள் அமைச் சர் விமல் வீரவன்சவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்டு ள்ள வழக்கு நேற்று (08) கொழும்பு மேல் நீதி மன்றத்தில் மீண்டும் விசாரணைக்கு எடுத் துக்கொள்ளப்பட்டது.

கொழும்பு மேல் நீதி மன்ற நீதிபதி மொஹமட் மிஹாயில் முன்னிலை யில் இந்த வழக்கு விசா ரணைக்கு அழைக்கப் பட்டது. இதன்போது, இலஞ்ச ஊழல் ஆணைக் குழு சார்பில் முன்னி லையான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் அசாத் நவாவி தலை மையிலான குழுவினர், வழக்கின் சாட்சியாளர் களிடமிருந்து சாட்சியங் களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகளை மேற் கொண்டனர்.

இதனைத் தொடர் ந்து, மேலதிக சாட்சி விசாரணை ஜூன் மாதம் 25ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

கடந்த 2010ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில், தனது சட்டபூர்வ வருமானத்தை விட 75 மில்லியன் ரூபா விற்கும் அதிக சொத்துக் களை ஈட்டியதன் மூலம் இலஞ்ச ஊழல் சட்டத் தின் கீழ் குற்றமிழைத்து ள்ளதாகக் கூறி, கடந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு வினால் முன்னாள் அமைச்சர் விமல் வீர வன்சவுக்கு எதிராக இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

# உள்ளூர் துப்பாக்கியுடன்

## வெல்லாவெளியில் ஒருவர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - வெல் லாவெளிப் பகுதியில் சட்டவிரோத உள்ளூர் தயாரிப்பிலான துப்பாக் கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெல்லாவெளி பொலி ஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவ லுக்கு அமைய நேற்று முன்தினம் (7) முன்னெ டுக்கப்பட்ட தேடுதலின் போதே, இந்த சந்தேக நபர் கைதாகியுள்ளார்.

திக்கோடை சுவர ணையடிப் பகுதியில் அமைந்துள்ள வீடு ஒன் றில் மறைத்து வைக்கப் பட்டிருந்த நிலையில், குறித்த துப்பாக்கி மீட் கப்பட்டுள்ளதாகப் பொலி ஸார் குறிப்பிடுகின்ற னர். (ந-7)

# மாமனார் தாக்கியதில் மருமகன் உயிரிழப்பு

(அம்பலாந்தோட்டை)

அம்பலாந்தோட்டை மல்பெத்தாவ முதலாம் ஒழுங்கைப் பகுதியில் நேற்று முன்தினம் (07) இரவு இடம்பெற்ற மோதலில் மாமனாரால் தாக்கப்பட்டு படுகாயம டைந்த மருமகன் உயிரி ழந்துள்ளார்.

மாமண்டல ஜன்ஸா கம பகுதியைச் சேர்ந்த "வெலி பசிந்து" என்று அழைக்கப்படும் பசிந்து உதயங்க அபேரத்ன (வயது - 26) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவ ராவார்.

உயிரிழந்தவருக்கும் அவரது மனைவிக்கும் இடையே நீண்டகால மாக குடும்பத் தகராறு நிலவி வந்துள்ளது.

இந் நிலையில் மனைவியுடன் வாக்கு வாதத்தில் ஈடுபட்டு அவரைத் தாக்க முயன் றபோது, அவரிடமிருந்து தப்பிப்பதற்காக மனைவி வீட்டின் அறைக்குள் ஓடி ஒளிந்து கொள்ள முயன்றுள்ளார்.

எனினும், கணவன் அந்த அறைக்குள்ளும் துரத்திச் சென்று மனை வியைத் தாக்க முற்பட்டு ள்ளார்.

இதன்போது, தனது மகளைக் காப்பாற்றுவ தற்காக அருகிலிருந்த தடி ஒன்றைக் கொண்டு தந்தை (மாமனார்), மரு மகனின் தலையில் பலமாகத் தாக்கியுள்ள தாக தெரியவந்துள்ளது.

இந்தக் கொலைச் சம் பவம் தொடர்பாக சந்தே கநபரான மாமனார் அம் பலாந்தோட்டை பொலி ஸாரால் கைது செய்யப் பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை பொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

# ஐஸ் போதைவஸ்துடன் பெண் ஒருவர் கைது

(மட்டக்களப்பு)

கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கு ரயி லில் 25 கிராம் ஐஸ் போதைப் பொருளை வியாபாரத்துக்காக எடு த்துச்சென்ற பெண் ஒரு வர் நேற்று திங்கட்கி ழமை (8) காலை கைது செய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு தலைமை யகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரியந்த பண்டார தெரிவித்தார்.


மட்டக்களப்பு தலை மையக பொலிஸ் ஊழல் ஒழிப்புப் பிரிவுக்கு கிடைத்த தகவலை யடுத்து நேற்றுக் காலை 7.30 மணியளவில் குறி த்த பிரதேசத்திலுள்ள வீடொன்றை பொலிஸ் ஊழல் ஒழிப்பு பிரிவினர் முற்றுகையிட்டனர்.

இதன்போது கொழு ம்பு மட்டக்குளி பிரதே சத்தில் இருந்து வியா பாரத்துக்காக மட்டக்க ளப்புக்கு ரயிலில் நேற்று காலை ஐஸ் போதைப் பொருளைக் கொண்டு சென்று, அதனை வீட் டில் மறைத்து வைத்தி ருந்த பெண் ஒருவரையே பொலிஸார் கைது செய் துள்ளனர்.

29 வயதுடைய அப் பெண், இரு பிள்ளைக ளின் தாய் என்றும் அவ ரது கணவர் மத்திய கிழ க்கு நாடொன்றில் வேலை செய்து வருபவர் என்றும் குறித்த பெண் அண்மை க்காலமாக போதைப் பொருள் வியாபாரத் தில் ஈடுபட்டு வந்துள் ளார் என்பதும் பொலி ஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாகன இலக்கத் தகடுகளை அச்சிடும் பணிகள் மீண்டும் ஆரம்பம்



(கொழும்பு)

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் கலாநிதி பிரசன்ன குணசேனவின் தலைமையில், ஓராண்டுக்கும் மேலாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகன இலக்கத் தகடுகளை அச்சிடும் பணி நேற்று அதிகாரபூர்வமாகத் தொடங்கி வைக்கப்பட்டது.

வெரஹாரவில் அமைந்துள்ள வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் மோட்டார் வாகன ஆய்வு மற்றும் பயிற்சி மையத்தில் நிறுவப்பட்டுள்ள அச்சிடும் பிரிவில் இப்பணி நடைபெற்றது.

22 ஆண்டுகளாக வாகன இலக்கத் தகடுகளை அச்சிட்டு வந்த ஒரு தனியார் நிறுவனத்தின் அதிகாரபூர்வ ஒப்பந்தக் காலம், கடந்த ஆண்டு ஏப்ரல் மாத இறுதியில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது.

வாகன இலக்கத் தகடுகள் அச்சிடுவதற்குப் பொருத்தமான ஒரு புதிய நிறுவனத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான முறையான செயல்முறையை போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு தொடங்கியது.

அதன்படி, தேர்ந்தெடுக்கப்பட்ட தெற்காசிய தொழில்நுட்ப நிறுவனமும் வாகனப் போக்குவரத்துத் திணைக்களமும் இந்தப் பதிவு இலக்கம் அச்சிடும் பணியை மீண்டும் தொடங்கியுள்ளன. (நி)

## மேலதிக வரி விதிப்புக்கு மத்தியிலும் குறையாத வாகன இறக்குமதி

(கொழும்பு)

நடப்பு ஆண்டின் ஆரம்பத்தில் வாகன இறக்குமதி மீது மேலதிக வரி விதிக்கப்பட்ட போதிலும், வாகன இறக்குமதிகள் எதிர்பார்த்த அளவுக்குக் கணிசமாகக் குறையவில்லை என இலங்கை சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் வாகனங்கள் தொடர்ந்தும் சந்தைக்குள் வந்த வண்ணமே உள்ளதாக சுங்கத் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் சந்தன புஞ்சிஹேவா ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

சந்தையில் பெருமளவிலான வாகனங்கள் விற்பனையாகாமல் தேங்கிக் கிடந்த போதிலும், இறக்குமதியில் பெரிய வீழ்ச்சி ஏற்படவில்லை என்றும், இதனால் ஏற்பட்டுள்ள சிறிய அளவிலான குறைபாடானது அரசாங்கத்தின் வருமானத்திற்கு எவ்வித நிதி ரீதியான பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சுங்கத் திணைக்களத்திற்கு கிடைக்கும் ஒட்டுமொத்த வருமானத்தில் சுமார் 30 சத வீதமான பங்களிப்பு வாகன இறக்குமதி மூலமாகவே கிடைக்கப் பெறுகின்றது.

கடந்த ஆண்டும் வாகன இறக்குமதியானது சுங்க வருமானத்தில் 30 முதல் 35 சதவீதமான பங்களிப்பைக் கொண்டிருந்ததுடன், அதே போக்கு இந்த ஆண்டும் நீடிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)



இலங்கை மற்றும் மாலைதீவு ரோட்டறி மாவட்டத்திற்கான விருது வழங்கும் நிகழ்வு கொழும்பிலுள்ள தனியார் விருந்தினர் விடுதியில் அண்மையில் இடம் பெற்றிருந்தது.

இலங்கை மற்றும் மாலைதீவு ரோட்டறி மாவட்ட ஆளுநர் ஜெல்வின் பெரேரா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், யாழ்ப்பாணம், நல்லூர், பெனிசுலா, சுன்னாகம் ஆகிய ரோட்டறிக் கழக உறுப்பினர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

(படம்- சுபேசன்)

## கனவு இல்லம் மெய்ப்பட (பகுதி 32)

### வீட்டுக்கட்டுமானத்தில் Structural Design: ஏன் இது மிக முக்கியம்?

IESL VC

Dream House

ஒரு வீட்டின் வெளிப்புற அழகைப் பார்த்து நாம் வியக்கலாம், வண்ணமயமான பெயிண்ட்கள் மற்றும் இன்டீரியர் டிசைன்களை ரசிக்கலாம். ஆனால், அந்த ஒட்டுமொத்த அழகையும் தாங்கி நிற்கும் "முதுகெலும்பு" எது தெரியுமா? அதுதான் Structural Design எனப்படும் கட்டமைப்பு வடிவமைப்பு.

மனித உடலுக்கு எலும்புக்கூடு எவ்வளவு முக்கியமோ, அதேபோல ஒரு வீட்டிற்கு structural design முக்கியம்.

வெறும் சிமெண்டும் செங்கல்லும் மட்டும் வீட்டைத் தாங்குவதில்லை; முறையான பொறியியல் கணக்கீடுகளே வீட்டைப் பாதுகாப்பாக வைக்கின்றன.

**1. பிரதானமாகக் கருத வேண்டிய structural பாகங்கள்**

ஒரு வீட்டின் எடையைத் தாங்கி, அதனைப் பூமிக்குக் கடத்தும் முக்கிய பாகங்கள் இவைதான்:

அடித்தளம் (Foundation): வீட்டின் முழு எடையையும் தாங்கும் மிக முக்கியமான பகுதி. மண்ணின் தரத்தைப் பொறுத்து (களிமண், மணற்பாங்கான நிலம்) அடித்தளத்தின் வகை தீர்மானிக்கப்பட வேண்டும்.

தூண்கள் மற்றும் விட்டங்கள்: கூரையின் எடையைத் தாங்கி, அதை அடித்தளத்திற்கு அனுப்பும் செங்குத்து மற்றும் கிடைமட்ட அமைப்புகள்.

கொங்கிரீட் தளம் (Slabs): நாம் நடக்கும் தரை மற்றும் கூரைப்பகுதி.

தாங்கு சுவர்கள் (Load-bearing Walls): தூண்கள் இல்லாத வீடுகளில் எடையைத் தாங்கும் சுவர்கள்.

**2. நீண்டகால நீடித்த உழைப்பு** (Durability )

ஒரு வீடு 50 முதல் 100 ஆண்டுகள் வரை உறுதியாக இருக்க வேண்டும் என்றால், அதற்கு முறையான structural design அவசியம்.

இயற்கை பேரிடர் பாதுகாப்பு: நிலநடுக்கம், புயல், வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்களின் போது வீடு விரிசல் அடையாமலும், இடிந்து விழாமலும் இருக்க இதுவே கேடயமாகச் செயற்படுகிறது.

விரிசல்களைத் தவிர்த்தல்: முறையற்ற எடைப் பகிர்வினால் சுவர்களில் ஏற்படும் "ஸ்ட்ரக்சுரல் விரிசல்களை" (Structural Cracks) ஆரம்பத்திலேயே தடுக்கிறது. இதன் மூலம் வீட்டின் ஆயுள் பல தசாப்தங்களுக்கு நீடிக்கிறது

**3.கட்டுமானச் செலவைக் குறைப்பதில் இதன் பங்கு** (Cost Optimization )

பலர் structural இன்ஜினியருக்குக் கொடுக்கும் பணத்தை வீண் செலவு என்று நினைக்கிறார்கள். ஆனால், அதுதான் உண்மையான சேமிப்பு!

தேவையின்றி அதிக பொருட்கள் பயன்படுத்துவதைத் தடுத்தல் (Over-designing): முறையான கணக்கீடு இல்லையென்றால், மேசன்கள் பாதுகாப்புக்காகத், தேவைக்கு அதிகமாக கம்பி (Steel) மற்றும் சிமெண்ட்டைப் பயன்படுத்துவார்கள்.

சரியான design இருந்தால், எங்கு எவ்வளவு கம்பி, எவ்வளவு கொங்கிரீட் தேவை என்று துல்லியமாகக் கணக் கிட்டுச் செலவைக் குறைக்கலாம்.

பராமரிப்புச் செலவு குறைவு: வீடு கட்டிய சில வருடங்களிலேயே ஏற்படும் பழுதுகள், பூச்சு வேலைகள் போன்ற தேவையற்ற பிற்காலப் பராமரிப்புச் செலவுகளை இது முற்றிலும் தவிர்க்கிறது.

**4. வீட்டின் அழகை மேம்படுத்துவதில் பங்களிப்பு** (Aesthetics)

"Structural design என்பது வெறும் கம்பியும் சிமெண்ட்டும்தானே, இதில் எங்கே அழகு இருக்கிறது?" என்று கேட்கலாம். ஆனால், நவீன கட்டிடக்கலை அழகிற்கு இதுதான் அடிப்படை.

பெரிய ஹால் மற்றும் திறந்தவெளி அமைப்புகள் (Spacious Halls): நடுவில் எந்தத் தூண்களும் (Columns) இல்லாமல், பெரிய ஹோல் அல்லது பார்ட்டி ஹோல் அமைக்க structural இன்ஜினியரிங் கணக்கீடுகளே உதவும்.

வளைவுகள் மற்றும் நவீன மொடல்கள்: காற்றில் மிதப்பது போன்ற படிக்கட்டுகள் (Floating Staircases), பெரிய கண்ணாடிச் சுவர்கள், நீட்டிக் கொண்டிருக்கும் பால்கனிகள் (Cantilever balconies) போன்ற கண்ணைக் கவரும் அழகிய வடிவமைப்புகள் சாத்தியமாவது structural design இன் பலத்தால்தான்

**5. சௌகரியத்தை ஏற்படுத்துவதில் இதன் பங்கு** (Comfort & Peace of Mind)

ஒரு வீடு சௌகரியமாக இருக்க வேண்டும் என்றால், அங்கு பயமில்லாத நிம்மதியான சூழல் இருக்க வேண்டும்.

அதிர்வுகள் மற்றும் சத்தமின்மை: மேல் தளத்தில் யாராவது நடந்தால் கீழ் தளத்திற்கு அதிர்வோ, சத்தமோ கேட்காமல் இருக்க கொங் கிரீட் தளத்தின் தடிமன் சரியாக வடிவமைக்கப்பட வேண்டும்.

மனஅமைதி: "நம் வீடு பாதுகாப்பானது, எந்தப் புயல் வந்தாலும் தாங்கும்" என்கிற மனநிம்மதியை விட ஒரு மனிதனுக்குப் பெரிய சௌகரியம் வேறு எதுவும் இருக்க முடியாது.

**முத்தாய்ப்பான ஒரு வரி:**

வீட்டின் வெளிப்புற அழகு என்பது ஆடை போன்றது; அதை எப்போது வேண்டுமானாலும் மாற்றிக் கொள்ளலாம். ஆனால், structural design என்பது உடலின் இதயம் போன்றது. உங்கள் கனவு இல்லத்தின் இதயம் பலமாக இருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்!

**இலங்கை பொறியியலாளர் சங்கம், வடக்கின் அத்தியாயம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## பாடகர்...

பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சொல்லிசைக் கலைஞர் சங்கீத்தனை விடுவிக்கக் கோரி வல்வெட்டித்துறையில் நேற்று திங்கட்கிழமை காலை கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பாடல் பாடியதற்காக சிறைத் தண்டனையா?, அரசே வேண்டாம், தமிழர்களை நிம்மதியாக வாழ விடு போன்ற கோசங்கள் எழுப்பப்பட்டன.

வல்வெட்டித்துறை மக்களினால் முன்னெடுக்கப்பட்ட இக்கவனயீர்ப்பு போராட்டத்தில் வல்வெட்டித்துறை பொது அமைப்புகளை சேர்ந்தவர்கள், வல்வெட்டித்துறை நகரசபை உப தவிசாளர் நா.பத்மநாதன், வல்வெட்டித்துறை, பருத்தித்துறை நகரசபை மற்றும் கரவெட்டி பிரதேச சபை உறுப்பினர்கள், வலிகிழக்கு பிரதேச சபை தவிசாளர் நிரோஷ் மற்றும் உப தவிசாளர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் செயலாளருமான செ.கஜேந்திரன், ஜனநாயக போராளிகள் கட்சி தலைவர் சி.வேந்தன், முன்னாள் வல்வெட்டித்துறை நகரபிதா இ.சுரேன், வல்வையின் நீதிக்கான குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் விமலதாஸ் கவிச்செல்வன் மற்றும் பொதுமக்கள், தமிழ்த்தேசிய ஆர்வலர்கள் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர்.

இதேவேளை வல்வெட்டித்துறை சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் இளைஞர்களை நேற்று முன்தினம் (07) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் நேரில் அழைத்து விசாரணை மேற்கொண்டு வாக்குமூலங்களைப் பதிவு செய்த வல்வெட்டித்துறை பொலிஸார் குறித்த போராட்டத்தினை கைவிடும்படியும் இல்லையேல் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவீர்கள் என அச்சுறுத்தல் விடுத்திருந்தனர்.

இதேவேளை நேற்றுக் காலையில் வல்வெட்டித்துறை முன்னாள் நகரபிதா இ.சுரேனையும் நேரில் அழைத்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டிருந்தனர்.

இந்நிலையில் நேற்றைய போராட்டத்தில் கலந்துகொண்டிருந்தவர்களை அச்சுறுத்தும் வகையில் வல்வெட்டித்துறை பொலிஸார் மற்றும் இராணுவப் புலனாய்வாளர்கள் புகைப்படம் மற்றும் காணொளி பதிவுசெய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7,60)

## செம்பியன்பற்று...

இரவு வழமை போல கடற்றொழிலுக்குச் சென்றுள்ளார். எனினும் நீண்ட நேரமாகியும் அவர் கரை திரும்பாததால் குடும்பத்தினரிடையே அச்சமும் அப்பகுதியில் பெரும் பரபரப்பான சூழ்நிலையும் ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து, செம்பியன்பற்று வடக்கு சென். பிலிப் நேரிஸ் கடற்தொழிலாளர் சங்கத்தினர் உடனடியாகக் களத்தில் இறங்கி தேடுதல் பணிகளை ஆரம்பித்தனர். இத்தேடுதல் முயற்சிக்கு கடற்படையினரும் தங்களது முழுமையான ஒத்துழைப்பை வழங்கியிருந்தனர்.

பல மணித்தியாலங்கள் நடுக்கடலில் முன்னெடுக்கப்பட்ட தீவிர தேடுதலின் பயனாக கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த குறித்த மீனவர் பாதுகாப்பாக மீட்கப்பட்டு கரை சேர்க்கப்பட்டார். (ந-7,60)

## அரசிடம்...

ணைந்த எதிர்க்கட்சிகளின் செயற்குழுக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர்,

2025இல் அரசாங்கத்திடம் இருந்த பணத்தில் 808 மில்லியன் டொலருக்கு என்ன நடந்தது என்பது தொடர்பான சரியான விபரங்கள் இல்லை என சர்வதேச நாணய நிதியம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் நிதி அமைச்சர் இந்தப் பணம் பற்றித் தெளிவுபடுத்த வேண்டும். இந்த மாபெரும் தொகைக்கு என்ன ஆனது? அது எங்கு இருக்கிறது? இது பற்றி அரசாங்கம் நாட்டு மக்களுக்கு சொல்ல வேண்டும்.

கடந்த காலத்தில் ஹேக்கர்கள் திறைசேரியிலிருந்து 2.2 மில்லியன் டொலரைத்திருடிவிட்டதாகக்கூறி பெரும் பரபரப்பு ஏற்பட்டது. ஆனால். சர்வதேச நாணய நிதியம் சமீபத்தில் வெளியிட்ட அறிக்கை, அதைவிட மிகப் பெரியதாக உள்ளது. பில்லியன் கணக்கான டொலர்கள் வெளியேறுகின்றன. அரசாங்கத்தைச் சுற்றியுள்ள சில திருடர்கள் இதற்குக் காரணமாக இருக்கலாம்.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. சட்டம் இரண்டு விதமாக செயற்படுவதாகக் கூறப்படுகிறது. ஆதரவாளர்களுக்கு ஒரு விதமாகவும் எதிர்ப்பவர்களுக்கு மற்றொரு விதமாகப் பயன்படுத்தப்படுகிறது.

கடந்த காலத்தில் நடந்ததாகக் கூறப்படும் மோசடிகள் மற்றும் ஊழல்களைப் பற்றி இன்னும் பேசிக் கொண்டிருப்பதில் பயன் இல்லை, உலகிலேயே அதிக எரிபொருள் விலையை இலங்கைதான் செலுத்துகிறது என்று சர்வதேச வங்கியான HSBC கூறியுள்ளது.

இந்த அரசாங்கம் ஒரு லீற்றர் டீசலுக்கு சுமார் 98 ரூபாவை முறையற்ற வகையில் ஈட்டுகிறது என்ற விடயம் பற்றி விசாரிக்க வேண்டும். இது குறித்து நாங்கள் இலஞ்ச ஆணைக் குழுவிடம் புகார் அளித்தோம். ஆனால் இது வரை எந்தப் பதிலும் இல்லை.

30 கப்பல்களில் தரம் குறைந்த நிலக்கரியைக் கொண்டு வந்த மோசடியால், இந்த நாட்டு மக்கள் இன்று ஒரு பெரிய எரிபொருள் சிக்கலை எதிர் கொள்கின்றனர்.

அந்த நிலக்கரி திட்டமிட்டபடி மின்சாரத்தை உற்பத்தி செய்யாததால், தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்ய ஒரு நாளைக்கு 1.5 மில்லியன் லீற்றர் டீசல் வீணாக எரிக்கப்பட வேண்டியுள்ளது. எரிபொருள் விலை உயர்வுக்கு இதுவே முக்கிய காரணம் என்றார். (ந-7)

## சுகா...

சேவைக்கால அடிப்படையில் நியாயமான முறையில் நியமனங்கள் வழங்கப்பட வேண்டும் எனக் கோரி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சுகாதார தொண்டர்கள் நேற்றுத் திங்கட்கிழமையும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த போராட்டமானது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை முன்றலில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது வேண்டும் வேண்டும் நீதி வேண்டும், சுகாதார தொண்டர்களுக்கு நியமனம் வேண்டும்.


அநுர அரசே சுகாதார தொண்டர்களுக்கு நியாயமான தீர்வு தர வேண்டும் உள்ளிட்ட பதாகைகளை ஏந்தியவாறு கோஷமிட்டு போராட்டத்தை முன்னெடுத்தனர். (ந-7)

## சங்கீத்தனை...

லில் வைக்கப்பட்டுள்ள சொல்லிசை பாடகர் கனேஷ்குமார் சங்கீத்தனை பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் யாழ்ப்பாண சிறைச்சாலைக்குச் சென்று பார்வையிட்டுள்ளார்.

முன்னதாக குறித்த பாடகரை விடுதலை செய்யுமாறு ஜனாதிபதியிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ள சிறீதரன் நேற்றுப் பாடகரை சிறைச்சாலையில் சந்தித்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7,33)






































Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சுழன்றடிக்கும் காற்று கொந்தளிக்கும் கடல்

## நீரியல் வளத் திணைக்களம் விசேட அறிக்கை

(கொழும்பு)

நாட்டைச் சூழவுள்ள பகுதிகளில் நிலவும் சீரற்ற வானிலை மற்றும் கடல் கொந்தளிப்பு காரணமாக, மீனவர்களின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த விசேட அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

குறித்த அறிக்கையில், வளிமண்டலவியல் திணைக்களத்தின் தரவுகளின் படி காங்கேசன்துறை, யாழ்ப்பாணம், மன்னார் முதல் கற்பிட்டி வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகம் மணிக்கு 60-70 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக்கூடும் என்பதால் கடல் அலைகள் மிக அதிக உயரத்திற்கு எழும்பும் அபாயம் காணப்படுவதாக அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே காங்கேசன்துறை, யாழ்ப்பாணம், மன்னார், புத்தளம் முதல் கற்பிட்டி வரையான கடற்பரப்புகளில் கரையோர மீன்பிடியில் ஈடுபடும் சிறிய படகுகள் மற்றும் பாரம்பரிய படகுகளின் உரிமையாளர்கள் மறு அறிவித்தல் வரும் வரை மீன்பிடி நடவடிக்கைகளுக்காகக் கடலுக்குச் செல்வதைத் தவிர்க்கவும்.

இதேவேளை கற்பிட்டியிலிருந்து சிலாபம், நீர்கொழும்பு, கொழும்பு, காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளிலும் காற்றின் வேகம் அதிகரிப்பதற்கும் அலைகள் உயர்வதற்கும் அபாயம் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அப்பகுதிகளில் தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் கடலுக்குச் செல்வதற்கு முன்னர் நிலவும் சூழ்நிலை குறித்து மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

பாதுகாப்பாகத் தொழிலில் ஈடுபடக்கூடிய பொருத்தமான சூழல் நிலவினால் மட்டுமே மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுக. அபாயகரமான சூழ்நிலைகளில் கடற்றொழிலுக்குச் செல்வதைத் தவிர்ப்பதே சிறந்தது.


"மீன்பிடித் தொழிலுக்காகப் புறப்பட்டுச் செல்வது முதல், கடலில் தொழிலில் ஈடுபடும் காலம் மற்றும் மீண்டும் பாதுகாப்பாகக் கரைக்குத் திரும்பும் வரை முழுமையான காலப்பகுதியிலும் "உயிர்காப்பு அங்கிகளை" (Life Jackets) அணிந்திருப்பது கட்டாயமாகும்.

வளிமண்டலவியல் திணைக்களம் மற்றும் கடற்றொழில் திணைக்களம் ஆகியவற்றால் அவ்வப்போது வெளியிடப்படும் வானிலை அறிவிப்புகள் குறித்து தொடர்ந்தும் அவதானத்துடன் செயற்படுவது அவசியமாகும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. (ந-7)

# நாகர்கோவிலில் கையெறி குண்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வடமராட்சி மருதங்கேணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாகர்கோவில் கிழக்கு காட்டுப்பகுதியில், யுத்த காலத்தில் பயன்படுத்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் கையெறி குண்டு ஒன்று நேற்று (08) கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



நாகர்கோவில் கிழக்கு வனப் பகுதியில் உள்ள பனை மரமொன்றின் கீழ் கையெறி குண்டு இருப்பதை அவதானித்த பொதுமக்கள், அது குறித்து மருதங்கேணி பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கியுள்ளனர்.

தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த மருதங்கேணி பொலிஸார், குண்டு இருக்கும் பகுதியை அடையாளப்படுத்தி, அதன் பாதுகாப்பிற்காக இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களை பணிக்கு அமர்த்தியுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பான அறிக்கை இன்று (09) பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பேரில் குண்டை செயலிழக்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.(ந-7,60)

# போதைவஸ்துக்களுடன் 1077 பேர் அதிரடிக் கைது

(கொழும்பு)

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய, நாட்டில் போதைப்பொருளைத் தடுக்கும் நோக்கிலான "முழு நாடுமே ஒன்றாக" எனும் தேசிய திட்டத்தின் கீழ், நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (07) பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் 1,077 பேர் போதைப் பொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இது குறித்து பொலிஸ் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில்,

அத்துடன், தடுப்புக்காவல் உத்தரவு பெற்ற 04 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதற்காக 1,082 விசேட சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.

குறித்த போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளின் போது சிக்கிய சந்தேக நபர்கள் வைத்திருந்த போதைப் பொருட்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 388 கிராம் ஹெரோயின், 548 கிராம் ஐஸ், 02 கிராம் 960 மில்லிகிராம் கொக்கெய்ன், 241 கிலோகிராம் 520 கிராம் கஞ்சா, 6,588 கஞ்சா செடிகள், ஒரு கிராம் குஷ் ரகப் போதைப் பொருள், 62 கிராம் ஹஷீஷ் ரக போதைப் பொருள், 522 போதை மாத்திரைகள், 108 கிராம் மதனமோதகம் மற்றும் 120 கிராம் மாவா போதைப் பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-7)

## ஈஸ்டர் தாக்குதல்...

புலனாய்வு சேவையின் முன்னாள் பிரதானி சுரேஷ் சலே, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக நகர்த்தல் பத்திரத்தினூடாக நீதிமன்றத்திற்கு அறிவித்த போதே, கோட்டை நீதிவான் பசன் அமரசேனவிற்கு குற்றப் புலனாய்வு திணைக்களம் நேற்று இதனை அறிவித்துள்ளது.

சந்தேகநபரான சுரேஷ் சலே விசாரணைக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் செயற்படுவதாகவும் குறித்த பாதிப்பை ஏற்படுத்தும் செயற்பாடுகளுக்கு உதய கம்மன்பில, விமல் வீரவன்ச, திலித் ஜயவீர உள்ளிட்ட அரசியலுடன் தொடர்புடைய நபர்கள் ஆதரவு வழங்கி வருவதாகவும் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் விசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் இதுவரை வெளிப்படுத்தப்படாத அரசியல் பின்னணி வெளிக்கொணரப்படுவதைத் தடுக்கும் நோக்கிலேயே இந்தத் திட்டம் செயற்படுத்தப்படுவதாக நியாயமான சந்தேகம் எழுந்துள்ளதாகக் குற்றப் புலனாய்வு திணைக்களம் நேற்று நீதிமன்றத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ந-7)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (5802)

076 825 7716 (ஆகாஸ்)

வெறுப்பு யாருக்கு எதிராகவும் திரும்பலாம்

நினைவில் கொள்ள :
நீங்கள் வெறுப்பூட்டும் தகவலை பகிரும் போது

நாளை அதே வெறுப்பின் இலக்காக நீங்களும் மாறலாம்.

நிகழ்நிலையில் உள்ள தீங்கு விளைவிக்கும் கதைகள் பெரும்பாலும் கோபம், பயம் மற்றும் சமூகப் பிரிவினையை உருவாக்கும் அரசியல் அல்லது தனிப்பட்ட நோக்கங்களுக்காக உருவாக்கப்படுகின்றன.

அதை தொடர்ந்தும் பரப்பாதீர்கள்.
வெறுப்பை அதன் முளையிலேயே கிள்ளி எறியுங்கள்.

இந்த செய்தி SOND அமைப்பினால், ஐ.நா. இலங்கை மற்றும் UNICEF இலங்கையின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது. (7775)

**மணப்பெண் தேவை**

01.உரும்பிராய் - அச்சுவேலி, இந்து, 1991, பூரம், Phd MSc in Software Engineering, Researcher, Norway citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 57168

02.அளவெட்டி - வட்டுக்கோட்டை, இந்து, 1992, மகம், MSc in project Management, Bussiness managing Director, uk citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 54213

03.அளவெட்டி, இந்து, விசாகம், 1993, BSC Engineering (Australia), Engineer, Australia Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 55831

04.சிறுப்பிட்டி - நீர்வேலி, இந்து, 1994, கேட்டை, BBA, ACCA, PGDP in strategic Management, Accountant, canada citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.57140

05.புங்குடுதீவு, இந்து, 1995, பரணி, BSc Biomedical Science, HR in IT, canada citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 49598

06.அராலி - கைதடி, இந்து, 1996, பூசம், BSC (Hons) in Quantity Surveying university of Moratuwa, Quantity surveyor, Dubai மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 57521

07.சுண்டுக்குளி - ஏழாலை, Roman Catholic, 1991, மகம், Bachelor in mechanical Engineering (university of Peradeniya) Engineer, consultant, singapore மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 57196

08.சுன்னாகம் - அச்சுவேலி, இந்து, 1992, பரணி, Electronic Engineering, Electronic Engineer, Switzerland Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 53671.

09. மூளாய் - மானிப்பாய், இந்து, 1988, பரணி, Doctorate in finance Management, Bank Manager & Lecture, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 43978

10.கொக்குவில், இந்து, 1989, சதயம், BSc(hons) Quantity Surveying - (university of Moratuwa), Coast Engineer, Qatar மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 54656

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். Unmarried, Divorce என்பன உண்டு.

(C-5800)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728
077 803 8193

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபன[illegible] இல. 19 [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.06.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media